உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் அ	பிரசோற்பத்தி, தை.	மலர் ய

பின்னங்குடிச் சுப்பிரமணியசாத்திரியார்

தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக்

குறிப்புரையும் மறுப்பும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

மறுப்பு 32.

(முகவுரை-பக்கம் 14.)

[தெய்வச்சிலையார்—இவர் எக்காலத்தில் இருந்தார் என்பது வெளிப்படையாக அறிய இயலாதாயினும், உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், இவர்கள் காலத்துக்குப் பிற்பட்டவராயிருக்கலாம் என்பது, 'எடுத்தோதாதன மூன்றாவதன் கண், ஆன், ஆல், ஒடு, ஆறாவதன்கண் அ' (வேற்றுமை-2-தெய்) என்ற வாக்கியத்தாலும், 'ஒருவினை ஒடுச்சொல்'........ (சொல் -91) என்ற சூத்திரத்துக்குக் கூறும் பொருளானும் தோற்றுகின்றது] என்றார் குறிப்புரையாளர்.

இங்கே 'தெய்வச் சிலையார் என்பவர், இளம்பூரணருக்கும், சேனாவரையருக்கும் நச்சினார்க்கினியருக்கும் காலத்தால் பிற்பட்டவர்' என்பது இக்குறிப்புரையாளரது கொள்கை..

இதனைச் சாதித்தற்கு இரண்டு ஏதுக்கள் எடுத்துரைத்தார். அவற்றுள் ஒன்று,

'அவைதாம், (எட்டு வேற்றுமை என்பனதாம்)
பெயர் ஐ ஒடுகு,
இன் அது கண்விளி என்றும் ஈற்ற.' என்னும்

சூத்திரவுரையிலே, அவர் (தெய்வச்சிலையார்) 'எடுத்தோதன (உருபுகள்) மூன்றும் வேற்றுமைக்கு, ஆன், ஆல், ஓடு என்பனவும், ஆறும் வேற்றுமைக்கு, அ என்பதும்' என்று கூறினர் என்பது.

மற்றொன்று, 'ஒரு வினையொடுச்சொல் உயர்பின் வழித்தே.' என்னும் சூத்திரத்திற்கு அவர் கூறிய பொருள் என்பது. இங்ஙனம் இவர் கூறிய இரண்டு ஏதுக்களும் இன்னவென்று குறிப்புரையாளர் விளங்க விரித்துரைத்தாரிலர். இவ்வேதுக்கள் இரண்டும் இவர் கொள்கையைச் சாதிக்கும் வலியுடையனவா? தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்புரை எழுதுதற்குத் தமக்கு மிக்க உதவியாயிருந்தது வடமொழி வியாகரணம், தருக்கம், பூர்வமீமாஞ்சை ஆகிய இவற்றின் அறிவு என்று சாற்றினவர், அவற்றை நன்கு விளங்க உரையாமைக்குக் காரணம் என்னையோ? மேற்குறித்த வடநூல்கள் இவர்க்குப் புரியும் உதவி இத்துணையேபோலும். அது கிடக்க.

இனி, 'உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே' என்புழி 'என்மனார்' என்பது செய்யுண்முடிபு எய்தி நின்றதோர் ஆரீற்று எதிர்கால முற்றுச்சொல் எனவும், இவ்வாறே விளங்க இளம்பூரணர் கூறாராயினர், மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி, உய்த்துணர வைப்பது அவர்க்கு இயல்பாகலான் என்றும் சேனாவரையர் உரைத்தாரன்றே! அவ்வாறே இக்குறிப்புரையாளருக்கும் உய்த்துணரவைத்தல் இயல்பெனக்கொண்டு மேலே ஆராய்வாம்.

ஆசிரியர் அகத்தியனார், வேற்றுமை இத்தனையென்று வரையறுத்து ஓதுவார்—

'எழியல் முறையது எதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்று
ஓதிய புலவனும் உளன்ஒரு வகையால்
இந்திரன் எட்டாம் வேற்றுமை யென்றனன்'

என்று சூத்திரம் இயற்றினர். இதனால் வடநூலாருள், விளி வேற்றுமை யென்பது எழுவாய் வேற்றுமையின் திரிபேயன்றித் தனியே ஓர் வேற்றுமை யென்று கொள்ளப்படாது ஆதலால், வேற்றுமை ஏழேயாம் என்பாரும், இந்திரன் தான் இயற்றிய ஐந்திர வியாகரணத்துள் விளிவேற்றுமையை அவ்வெழுவாய் வேற்றுமையின் வேருக வேண்டினன் ஆதலால் வேற்றுமை எட்டேயாம் என்பாரும் என இருதிறத்தர் ஆசிரியர் என்று பிறர் மதம் கூறித் தமிழிலக்கண நூலுள் கொள்ளப்படுவது வேற்றுமை எட்டென்பதே என்று தந்துணிபுகூறினர். ஆசிரியர் தொல்காப்பியனாரும், அதுபற்றி

'வேற்றுமை தாமே ஏழென மொழிப' எனப் பிறர்மதம் கூறி,
'விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே'

எனத் தந்துணிபு கூறினர்.

இங்ஙனம் 'வேற்றுமை எட்டென்று வரையறுத்தோதிய ஆசிரியர், அதன்மேல் அவ் வேற்றுமைகளின் பெயரும் முறையும்பற்றி,

'அவைதாம், பெயர் ஐ ஒடுகு
இன் அது கண் விளி யென்னும் ஈற்ற' என ஓர் சூத்திரம் ஓதினர். இவர் மேலே எழுவாய் (முதல்) வேற்றுமை (உருபும் விளியும் ஏலாது) பெயர்தோன்றும் நிலையேயாம் என்பார். ஆதலின், அதனைப் 'பெயர் வேற்றுமை' யென்று குறியிட்டு ஆளுவர். இதனைப் 'பொருண்மை சுட்டல்' அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே என்பதனாலும் உணர்க. இரண்டாம் வேற்றுமைக்குரிய உருபு ஐ யாதலால், அதனை 'ஐ யெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' யெனக் குறியிட்டாளுவர். அங்ஙனமே மூன்றும் வேற்றுமையை 'ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி' யென்றும், நான்காம் வேற்று

மையைக் குவ்வெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி’ யென்றும்; ஐந்தாம் வேற்றுமையை ‘இன்னெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி’ யென்றும், ஆறும் வேற்றுமையை ‘அது வெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி’ யென்றும், ஏழாம் வேற்றுமையைக் ‘கண்ணெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி யென்றும் உருபின் பெயரால் குறியிட்டாளுவர். எட்டாம் வேற்றுமையுருபு பல திறப்படுதலாலும் அவற்றுள்ளும் சிறப்புடையுருபு இதுதானென்று துணியப்படாமையானும், அதனை அப் பொருண்மையின் பெயரால் விளிவேற்றுமை யென்றே குறியிட்டார். இவ் வெட்டாம் வேற்றுமைக்கு அகத்தியனர் இட்ட குறி எதிர்முகவேற்றுமை யென்பது மேலே கண்ட அவரது சூத்திரத்தான் அறியப்படும்.

ஆகவே, இச் சூத்திரத்தில், ‘பெயர், ஐ, ஒடு, கு, இன் அது, கண், விளியென்பன, மேல் ஆட்சி நோக்கிய குறியென உய்த்துணர்ந்து கொள்ளப்படும்.

இனி, (உருபில்லாத) எழுவாய் வேற்றுமையும் (பல திறப்பட்ட உருபுகளையுடைய) விளிவேற்றுமையும் ஒழிந்த வேற்றுமைகளுக்குள்ளே, ஒவ்வொன்றிற்கும் உரிய உருபு இன்னதின்னதென்று ஆசிரியர் அகத்தியனர் போலத் தொல்காப்பியனர் வகுத்து வைத்தாரிலர். ஏழாம் வேற்றுமை ஒன்றற்கே

‘கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனாஅ
முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனர்’

என்றொரு சூத்திரத்தால் உருபுகளை விதந்தோதினர். ஏனைய வேற்றுமைகளுக்குச் ‘சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்’ என்னும் தந்திரவுத்திபற்றி, அவ்வேற்றுமை உருபுகளுள் முறையே சிறப்புடையன வென்று கருதப்பட்ட ஐ ஒடு, கு, இன், அது, கண், என்பனவற்றை, அச்சூத்திரத்தில்

எடுத்தோதி, மற்றை உருபுகளை உரையாசிரியன் தன்னூலா னும் முடிந்த நூலானும், ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கி உய்த்துக்கொண்டுணர வைத்தனர்.

ஆகவே, தொல்காப்பிய வுரையாசிரியருள் முந்தியவர் என்று சொல்லப்படும் இளம்பூரணர் ஒருவர் ஒழிய ஏனையோ ரெல்லாம், 'அவைதாம், பெயர் ஐ ஒடுகு, இன் அது கண் விளி யென்னும் ஈற்ற' என்னும் சூத்திரவுரையுள்ளே, ஆசிரியர் அச்சூத்திரத்தில் எடுத்தோதாத வேற்றுமையுருப்கள் இன்ன வின்னவென்று எடுத்துக்காட்டுவாராயினர்.

சேனாவரையர், 'சிறப்புடைப் பொருளைத்தானினிது கிளத் தல்' என்பதனால் (ஆசிரியர்) ஒடு என்றும் அதுவென்றும் ஓதினா ராயினும், ஆன் உருபும் அகரவுருபும் கொள்ளப்படும் என்றார். அச்சூத்திரவுரையுள் நச்சினார்க்கினியர், மூன்றும் வேற்றுமைக்கு உருபாக எடுத்தோதிய ஒடு என்பதனோடு ஓடு, ஆன் என்னும் இரண்டும், ஆறும்வேற்றுமைக்கு ஆது, அ, என்னும் இரண்டும் காட்டினார்.

அச் சூத்திரவுரையுள் தெய்வச்சிலையார் மூன்றும் வேற்று மைக்கு ஆசிரியர் எடுத்தோதாதனவாக ஓடு ஆல் ஆன் என்னும் மூன்றுருபுகளையும் ஆறும்வேற்றுமைக்கு அ என்பதொன்றனை யும் காட்டினார்.

இங்ஙனம் தெய்வச்சிலையார், ஆசிரியர் தொல்காப்பியனாரால் எடுத்தோதப்படாதன என்று காட்டியது தான், அவர் (தெய் வச்சிலையார்) மற்றை உரையாசிரியர்க்கெல்லாம் காலத்தால் பிற் பட்டவர் என்பதைக் குறிக்கும் ஏதுக்களில் ஒன்றாகக் குறிப் புரையாளர் குறித்தார்.

ஆகவே இத்தெய்வச்சிலையார் உரைப்பகுதியில் என்ன விசேடம் இருக்கிறதென்று நாம் உற்று நோக்கின், அவர், சேனா வரையர் காட்டாத ஓடுஆல் என்னும் இரண்டு உருபுகள் மூன்றும் வேற்றுமைக்கு உளவாகக் காட்டினார். அவற்றுள் ஆல் என்னும் உருபொன்றும் நச்சினார்க்கினியரால் அச்சூத்திர உரையுள்

குறிப்பிடப்படவில்லை. ஆயினும் தெய்வச்சிலையாரால் குறிக்கப்படாத ஆது என்னும் உருபை ஆறும்வேற்றுமைக்கு நச்சினர்க்கினியர் காட்டினர். மேலும் அவர் ஆல் என்பதோர் உருபும் ஆன் என்பதன் திரிபாக மூன்றும் வேற்றுமைச் சூத்திரவுரையுள் எடுத்தாண்டார். இளம்பூரணர், அகரவுருபை மாத்திரம் ஆறும் வேற்றுமைச் சூத்திரவுரையுள் எடுத்துக் காட்டினர் ஆயினும்,

'பல்லாறுகப் பொருள் புணர்ந் திசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய வென்ப' என்னும் சூத்திரவுரையுள்ளே, ஆன் என்னும் உருபையும் எடுத்துக்காட்டி, உருபின் பொருள்படவரும் பிறசொற்களும் உளவென்றார். ஆகவே, தெய்வச்சிலையார் மற்றை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டிய உருபுகளைக்காட்டிலும் மிகுதியான உருபைக் காட்டியதனால் அவர் மற்றையோர்க்கெல்லாம் பிற்பட்டவரென்பது குறிப்புரையாளர் கருத்துப்போலும். அன்றியும் அவருக்கு (குறிப்புரையாளருக்கு) அச்சூத்திரவுரையுள் ஆசிரியர் எடுத்தோதாதன வென்று உரையாசிரியர்கள் காட்டியவற்றுள் ஆன் என்பது ஒழிந்தவை ஆசிரியர் தொல்காப்பியனர் காலத்துக்குப் பிற்பட்ட வழக்கில் வந்தனவென்பதும் கருத்துப்போலும். அற்றேல், குறிப்புரையாளர் ஆராய்ச்சித்திறன் குறைபாடு உடைத்தாதல் அறிக. ஆன் என்னும் உருபுபற்றி ஆசிரியர் தொல்காப்பியனர் வேற்றுமையியலுள் விளங்க எடுத்தோதாவிடினும், வேற்றுமை மயங்கியலுள்,

'ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்
தாம்பிரி விலவே தொகைவரு காலை.'
'குஐ ஆன்என வரூஉம் இறுதி
அவ்வொடு சிவணும் செய்யு ளுள்ளே.'

என்னும் சூத்திரங்களில் எடுத்தோதினரே யாவர். மேலும்

'மூன்றனும் ஐந்தனும் தோன்றக்கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி'

என்னும் சூத்திரத்தாலும் அதனையே குறித்தார்.

வேற்றுமையியலுள்ளும் 'இன்னன் ஏது' என்றதும் அது. மேலும் ஆசிரியர் தொல்காப்பியனர் ஆன் என்னும் உருபு தம்

சூத்திரங்களுள் பயின்றுவரவே தொகுத்தார் என்பது

'எனை யெச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினைநிலை யானும்'

'அதனாற் செயப்படற் கொத்த கிளவியும்'

'தத்தம் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே'
'ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்,
இனமொழி கிளந்த ஓத்தினானும்,
பொதுமொழி கிளந்த படலத் தானும்'
'மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானும்,
இதுநனி பயக்கும் இதனான் என்னும்
தொகைநிலைக் கிளவி பயனெனப் படுமே.'
'தன்னா லானும் முடிந்தநா லானும்
தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்.'

என்னும் இவை முதலிய கொண்டும் அறியப்படும்.

இனி ஒடு என்பதும் ஆசிரியர் தொல்காப்பியனார் பலவிடத்தும் உடம்போடு புணர்த்து ஓதினர் என்பது

'ஆவோ டல்லது யகரமுத லாது.'
'விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.'
'அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி'
'அதனோ டியைந்த வேறுவினைக் கிளவி'
'அதனோ டியைந்த ஒப்ப லொப்புரை'
'வினையேர் டல்லது பால்தெரி பிலவே.'
'ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்.'
'அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோடு.'
'அங்கதப் பாட்டவற் றளவோ டொக்கும்'
'மூங்கா வெருகெலி மூவரி அணிலோ
டாங்கவை நான்கும் குட்டிக் குரிய.'
வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதியஒருதிறத் தானும்.' என்னும்

சூத்திரப்பகுதிகளால் அறியப்படும்.

திருக்குறள், சூளாமணி, சிந்தாமணி முதலிய நூல்களுள், ஒடு என்னும் உருபு பயில வழங்கியவாறும் காண்க. ஓடு என்பது ஒடு என்பதன் திரிபென்பது சில உரையாசிரியர் கருத்து. பரிமேலழகரும் அவ்வாறு கூறியது காண்க.

இனி, ஆல் என்னும் உருபுவழக்குப் பற்றித் தொல்காப்பியத்தில் மேற்கோள் நாடவேண்டா, ஆன் வந்தவிடத்து ஆல் வருமென்று தெய்வச்சிலையாரும் குறித்தார் ஆதலால். ஆயினும் திருக்குறளுள் அவ்வுருபு பயில வழங்கியவாறு,

'கற்றதனால் ஆய பயனென்கொல்.'
'உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வேம் எனல்.'
'நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால்.'
'ஒப்புரவி னால்வரும் கேடெனின்.'
'நாணால் உயிரைத் துறப்பர்.'
'இயல்பினால் இல்வாழ்வான் என்பான்'
'மரப்பாவை நாணால் உயிர்மருட்டி யற்று'
'ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்'
'இதனை இதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்து'
'கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்'
'களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவன போலக் கெடும்'
'துணிநீரால் தூய்மதி நீரால் அணிபெற
ஈன்றவள் திதலைபோல் ஈர்செய்யும் தளிரொடும்'

(கலித்தொகை) என்பனவற்றால் அறிக. உலகவழக்கில் ஆல் உருபே பயின்று வருமாறும் அறிக.

இனி, ஆறும் வேற்றுமைக்கு அகரவுருபு, அதனால் தொடரப்பட்ட சொல்லின் பன்மைப் பொருள் குறித்துச் செய்யுள் வழக்கிலே, என கைகள், நின கைகள், தன கைகள், தில்லைக் கூத்தன தாள், சம்பந்தன செந்தமிழ் என வரும்.

இனி, 'ஆது' என்னும் உருபொன்று ஆறும் வேற்றுமைக்கு நெடுமுதல் குறுகும் ஒருமை மொழிக்கண், தொடர்மொழி ஒருமைப்பொருண்மையில், செய்யுள் வழக்கில் மட்டும், தனாது வெள் வேல், எனாது தலை, நினாது தலை, என வரும்.

மூன்றாம் வேற்றுமைக்கு, மாறு என்னும் உருபைத்தெய்வச் சிலையார் கொண்டார். சேனாவரையர், மாறு, உளி என்பவற்றைக் காட்டினார். இதனை நச்சினார்க்கினியர் கொள்ளாது மறுத்தார். அது பொருந்தாமை அவர் உரைகொண்டறிக.

தெய்வச்சிலையார், உடைய என்னும் உருபு ஒன்றை ஆறும் வேற்றுமைச் சூத்திரவுரையுள் எடுத்துக் காட்டினார். இதனை உருபின் பொருள்பட வந்த சொல்லென்று வேறோரிடத்தில் கூறினார் சேனாவரையர்.

இனிப் பேராசிரியர், இன் என்பதோர் உருபு எழாம் வேற்றுமைக்கு உரித்தென்றும், அது அதிகாரப் புறனடையால் கொள்ளப்படுமென்றும் திருக்கோவையார் உரையுள்ளே கூறினார்.

பரிமேலழகர், நின்று என்பது ஐந்தாம் வேற்றுமை உருபின் பொருள்பட வந்ததென்றார்.

"போதாரமளியின் மேனின்றும் புரண்டிங்ஙன்" "சிறு கண் யானையொடு பெருந்தேரெய்தி, யாம் அவணின்றும் வருதும்" என்புழியும் நின்று என்பது அது.

"விழித்த கண் வேல் கொண்டெறிப." 'நீலமணிமிடற்றொன் கைஞ்ஞின்ற ஆடல் கண்டாற் பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே' என்புழிக் கொண்டு என்பது ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமைப் பொருட்டில் வந்தது.

ஆகவே, ஆசிரியர் தொல்காப்பியனார், மேற்குறித்த சூத்திரத்தும் பிறண்டும் எடுத்தோதாதன வென்று சொல்லப்பட்ட வேற்றுமையுருபுகளும் அவ்வுருபின் பொருள்பட வந்த பிறசொற்களும் சங்கத்துச் சான்றோர் செய்யுள் வழக்கில் பயின்று வந்தமை மேற்குறித்த எடுத்துக்காட்டுக்களால் அறியப்படுதலால்,

அவை யெல்லாம் தொன்று தொட்டு வந்தவழக்கின என்று கொள்ளப்படுவனவே யன்றிப், பிற்காலத்துவழக்கின வென்று சொல்லப்படா வென்க.

முதனூலாசிரியர் ஆகிய அகத்தியனார், மூன்றும் வேற்று மைக்கும் ஆறும் வேற்றுமைக்கும் உரிய உருபுகள் இவை யிவை யென்பார்,

'ஆலும் ஆனும் ஒடும் ஓடுவும்
சாலும் மூன்றும் வேற்றுமைத் தனுவே
செய்வோன் காரணம் செயத்தகு கருவி
எய்திய தொழின்முதல் இயைபுடன் அதன்பொருள்'
'ஆறன் உருபே அது ஆது அவ்வும்
வேறொன்றுரியதைத் தனக்குரியதையென
இருபாற்கிழமையும் மருவுற வருமே,
ஐம்பால் உரிமையும் அதன்தற் கிழமை' என்னும்

சூத்திரங்களால் எடுத்தோதினார்.

பின்னூலாராகிய நன்னூலாரும் முறையே,

'மூன்று வதனுருபு ஆல்ஆன் ஒடுஓடு
கருவி கருத்தா உடனிகழ்வு அதன்பொருள்.'
'ஆற னொருமைக் கதுவும் ஆதுவும்—பன்மைக் கவ்வும்'

என்று சூத்திரம் ஓதினார் என்க. மேலும் அவர்,

'பெயரே ஐஆல் குஇன் அதுகண்
விளியென்றாகும் அவற்றின் பெயர்முறை.'

என்னும் சூத்திரத்தால் மூன்றும் வேற்றுமைக்கு ஆல் என்பது சிறப்புடை யுருபாக எடுத்தோதினார்.

இனி, அகத்தியச் சூத்திரங்களென்று மேலே காட்டப் பட்டன இரண்டும் அகத்தியச் சூத்திரங்களேயாயின், ஆல், ஓடு, ஆது, என்னும் உருபுகளை இளம்பூரணரும் சேனாவரையரும் விளங்க எடுத்துக் காட்டத் தடையென்னையோவெனின், நன்று வினாயினீர்; இளம்பூரணர் உரை மிகச்சுருங்கியது ஆகலின் காட்டினாரிலர். சேனாவரையர் 'எழியல் முறைமையது எதிர்முக வேற்றுமை' என்னும் அகத்தியச் சூத்திரத்தை மேற்

கோளாகக் காட்டினமையால், அவருக்கு அவ்வகத்தியத்தில் சில சூத்திரங்களின் அளவே கிடைத்தனவென்றும் மேற்கண்ட சூத்திரங்கள் கிடைத்திலவென்றும் கருதப்படும். ஆயினும் அவர் இடைச்சொல்லோத்தினுள் 'வேற்றுமைப்பொருள்வயின் உருபாகுநவும்' என்பதற்கு, இரட்டுறமொழிதல் என்பதனல் வேற்றுமையுருபுகளும், அவ்வுருபின் பொருள்பட வருவனவும் கொள்ளப்படுமென்று கூறுமாறு, உளிமுதலியவற்றை எடுத்துக் காட்டினர் ஆதலின், அவர் கண்ட இலக்கியத்தளவில் கூறிச் சென்முர் என்க.

இவ்வுரையாசிரியர்கள் அவற்றை எடுத்துக் காட்டா விடினும் அவருள் சேனாவரையர்க்குப் பிந்திய மயிலைநாதர் என்பார் நன்னூல் உரையுள் அவற்றை மேற்கோளாக எடுத்துக் காட்டியவாறு அறிக. இலக்கண விளக்க நூலாரும் சங்கர நமச்சிவாயரும் அவற்றை மேற்கோளாகக் காட்டினர். நச்சி னார்க்கினியரும் 'ஐம்பாலுரிமையும் அதன்தற்கிழமை' என்பது அகத்தியச்சூத்திரம் என மேற்கோள் கூறினர்.

ஏழாம் வேற்றுமைக்கு இல் என்பதோர் உருபு, மூன்றாம் வேற்றுமைக்கு ஆல் என்பதுபோல உலகவழக்கில் பயின்று வரும். இதனை நன்னூலார் 'உள்ளகம்புறம்இல் இடப்பொருள் உருபே' என்று எடுத்தோதினர். தெய்வச்சிலையார் இவ்வுருபை 'கண்கால் புறம் அகம் உள்ளுழை கீழ்மேல் என்னும் சூத்திர வுரையுள்' 'அன்னபிறவும்' என்பதனல் கொண்டு கூறினர். நச்சினார்க்கினியரும் அச்சூத்திரவுரையுள் அவ்வுருபை எடுத்துக் காட்டினர். இவர் ஆல் என்பது ஆன் என்பதன் திரிபென்றது பொருந்தாது.

எனவே, ஆல் இல் ஆன், அது, அ முதலிய உருபுகள் எல்லாம் தொல்காப்பியனார் காலத்துக்கு முன்தொட்டே வழக் கில் பயின்று வந்தனவென்று அறியப்படும் என்க.

இனித் தெய்வச்சிலையார் என்பவர் சேனாவரையர்க்கும் நச்சினார்க்கினியர்க்கும் காலத்தால் பிற்பட்டவர் என்னும் குறிப் புரையாளர் துணிபொருளுக்கு ஏதுக்களாக எடுத்துக் காட்டப்

பட்டவை இரண்டனுள்ளும், முன்னது பாழ்பட்டது. ஆகவே பின்னதும் (ஒரு வினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே.' என்னும் சூத்திரத்துக்கு அத்தெய்வச்சிலையார் கூறிய உரையே என்றதும்) அவ்வாறே பாழ்படும் ஆதலால் ஈண்டு அதுபற்றி ஆராய்தல்வேண்டா. முதற்கோணல் முற்றும் கோணல் அன்றே? வேண்டுமாயின், அச்சூத்திரவுரைக் குறிப்புப்பற்றி ஆண்டு ஆராய்வாம்.

இனிக் குறிப்புரையாளர் எடுத்துக் காட்டிய ஏதுக்கள் போலியாய் ஒழியினும் ஒழிக; அத்தெய்வச்சிலையார் சேனாவரையர்க்கும் நச்சினார்க்கினியர்க்கும் காலத்தால் பிற்பட்டவர் என்று அவர் கூறியதில் இழுக்குண்டோவெனின், இழுக்காமை யாண்டையதென்க. அற்றேல் அத்தெய்வச்சிலையார் காலம் பற்றி நுந்துணிபுதான் யாதோவெனின், எந்துணிபுதெய்வச்சிலையார் என்பார் இளம்பூரணர் ஒருவர்க்கே பிற்பட்டவர் என்பதும், சேனாவரையர் கல்லாடர் நச்சினார்க்கினியர் இவர்களுக்கு முற்பட்டவர் என்பதுமே. இத்துணிபை நிறுவுதற்கு 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் முதற்சூத்திரத்துக்கு உரையாசிரியர் பலரும் எழுதிய உரைக்குறிப்பு விசேடங்களே போதும். போதாது என்பார்க்குப் பிறசூத்திரவுரை விசேட ஏதுக்களும் காட்டப்படும்.

தெய்வச்சிலையார் இளம்பூரணருக்குப் பிற்பட்டவர் என்பதைச் சாதித்தற்கு ஏதுக்கள் :—

1. 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரவுரையுள், 'என்ப என்னும் முற்றுச்சொல் குறைக்கும் வழிக் குறைத்தல் என்பதனால் பகரம் குறைந்து, விரிக்கும் வழி விரித்தல் என்பதனால், மன்னும் ஆரும் என இரண்டு இடைச்சொல் விரிந்து என்மனார் என்று ஆயிற்றென்று இளம்பூரணர் கூறினார். இவ்வாறு கூறியது குற்றமெனத் தெய்வச்சிலையார் மறுத்து, அது வினைத்திரிசொல்லென்று கூறினார்.

2. அச்சூத்திரவுரையுள்ளே இளம்பூரணர் 'உயர்திணை' யென்பது இறந்தகால வினைத்தொகை யென்றார். தெய்வச்

சிலையார் அதனைமறுத்து, 'உயர்திணை' என்பது பண்புத் தொகை யென்றார்.

3. 'பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்' எனும் சூத்திரவுரையுள், இளம்பூரணர் 'இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே' என்னும் இலைசினல், 'நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் என உயர்திணை மருங்கில் பால் பிரிந்திசைக்குமென்று உதாரணம் காட்டினர். தெய்வச்சிலையார், அவ்வாறு வழக்கில் வருதலில்லையென்று மறுத்துள்ளார்.

4. 'மன்னுப் பொருளும் அன்ன வியற்றே' என்னும் சூத்திரவுரையுள், இளம்பூரணர் 'மன்னுப்பொருள்' என்பதற்கு 'இல்லாப்பொருள்' என்று பொருள் கூறிப் 'பவளக் கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை' என்பது உதாரணமாகக் காட்டினர். தெய்வச்சிலையார் அவ்வுரையை மறுத்து வேறுபொருள் கூறி வேறு உதாரணம் காட்டினர்.

5. 'பிறிது பிறிதேற்றலும் உருபுதொக வருதலும்' என்னும் சூத்திரவுரையுள் இளம்பூரணர் 'ஆறும் வேற்றுமையுருபு ஏனைவேற்றுமை யுருபுகளை ஏற்குமெனப் பொருளுரைத்துச் 'சாத்தனதனை' 'சாத்தனதொடு' என உதாரணம் காட்டினர். தெய்வச்சிலையார் இதனை மறுத்துப் பொருள் வேறு கூறி உதாரணமும் வேறாகக் காட்டினர்.

6. ஆக்கவும்மைக்கு இளம்பூரணர் 'நெடியனும் வலியனும் ஆயினன்' என்பது உதாரணமாகக் காட்டினர். இதனைத் தெய்வச்சிலையார் மறுத்து வேறு உதாரணம் காட்டினர்.

இனிக் கல்லாடனர் என்பவர் தெய்வச்சிலையாருக்கும் சேனவரையர்க்கும் இடைப்பட்ட காலத்தினர் என்பதற்குச் சான்றுகள் :—

1. 'உயர்திணை யென்மனர் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரவுரையுள் கல்லாடனர், 'இசைக்கும்' என்னுஞ்சொற்கு 'ஒலிக்கும்' என்று, அவருக்கு முற்பட்டவர் ஒருவர் பொருள்

கூறியதனைக் குறித்து மறுத்து வேறுரைகூறினார். 'இசைக்கும்' என்பதற்கு 'ஒலிக்கும்' என்று பொருள் கூறியவர் தெய்வச் சிலையாரே.

2. இக்கல்லாடனார் 'என்மனார்' என்னும் சொன்முடிபும் 'தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்' என்னும் சூத்திரக் கருத்தும், 'செப்பினும் வினவினும் சினைமுதற் கிளவிக்கு' என்னும் சூத்திரக் கருத்தும் இளம்பூரணர் கருத்தின்படியே கூறினார். அவ்வுரைகளைச் சேனாவரையர் மறுத்துரைத்தனர். அன்றியும் வினாவழுவமைதிக்கு, 'இம்மகள்கண் நல்லவோ கயல் நல்லவோ' என்று அவ்விருவரும் தெய்வச்சிலையாரும் உதாரண மாகக் காட்டியதனை மறுத்து, 'அது ஐயவுவமை வாய்பாட் டால் கண்ணைப் புனைந்துரைத்தல் கருத்தாகலின் அன்னவை யெல்லாம் உரையென்னும் செய்யுளாமென்றார்.

3. 'இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை' என்னும் சூத்திரவுரையுள் கல்லாடனார் 'குறுஞ்சூலி' 'குறுந்தடி' என்னும் உதாரணங்களைக் காட்டி அவை 'வாளா பெய்ராய் நின்றன' என்றார். இதனைச் சேனாவரையர் மறுத்துக், 'குறுஞ் சூலிகுறுந்தடி' என்னும் தொடக்கத்தன சூலிதடியெனப்பிரிந்து நில்லாமையின் பண்புகொள் பெயர் எனப்படா' என்றார்.

4. 'இவ்வூர்ப்பெற்ற மெல்லாம் அறம் கறக்கும்' ஆதீண்டுகுற்றி, 'இவ்வெருது புற்றின்னும்' என்னும் உதா ரணங்களை இளம்பூரணர் 'பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்' என்னும் சூத்திரத்தில் 'எல்லாம்' என்னும் இலேசு பற்றி முடித்துக் காட்டினபடியே கல்லாடனாரும் காட்டினார். தெய்வச்சிலையார் 'இப்பெற்றமெல்லாம் அறங்கறக்கும்' என் பதைக் காட்டினார். சேனாவரையர் 'ஆதீண்டுகுற்றி' என்பதைப் 'ஒரு பெயர்ப் பொதுச்சொல் உள்பொருளொழியத் தெரிபு வேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்' என்னும் சூத்திரத்து 'ஒன்றென முடித்தலால்' காட்டினார். அவர் 'இவ்வூர்ப்பெற்ற மெல்லாம் அறங்கறக்கும்' என்னும் உதாரணம் ஆண்டைக்கு எய்தாதென்று மறுத்தார்.

இனித் தெய்வச்சிலையார் சேனாவரையர்க்கு முற்பட்டவர் என்பதற்குச் சான்றுகள் :—(மேற்கூறப்பட்டவற்றுள் சில நிற்க),

1. 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்புழி, 'என்மனார்' என்பதுபற்றி இளம்பூரணர் கூறிய முடிபை மறுத்து, அது என்பவென்னும் முற்றுச்சொல்லின் திரிபு என்று தெய்வச்சிலையார் கூறினார். சேனாவரையர் 'இயற்சொற் றிரிசொல்' என்னும் சூத்திரவுரையிலே 'என்மனார் என்பதனை வினைத்திரிசொல் என்பாரும் உளர். அஃது 'ஒஃறிசினோர்,' 'பெறலருங்குரைத்து' என்பனபோலச் செய்யுண்முடிபு பெற்று நின்றதென்றலே பொருத்தமுடைத்து என்று கூறி அதனை மறுத்தார்.

2. தன்மை சுட்டலும் உரித்தென மொழிப, அன்மைக் கிளவி வேறிடத்தான' என்னும் சூத்திரவுரையிலே, சேனாவரையர், 'குற்றியன்று மகன்' என்றவழி, மகன் என்பது நின்று வற்றும் எனின்,........................வெளிப்படாது நின்ற இவன் என்னும் எழுவாய்க்கு அது பயனிலையாதலின் நின்றுவற்றுதல் யாண்டையது என்க என்று, அவருக்கு முற்பட்டவர் ஒருவர் உரையை மறுத்துக் கூறினார். அவ்வுரையை அடுத்துக், 'குற்றியல்லன் மகன்' என்புழிக் குற்றியென்பது அல்லன் என்னும் சொல்லோடு இயைந்தவாறு என்னையெனின்,...............இவன் குற்றியல்லன்' என இயையும் என்றார். 'குற்றியல்லன் மகனே' எனத் தேற்றேகாரம் கொடுத்துழி அன்மை துணியப் பட்ட பொருளைச் சுட்டில், குற்றி நின்று வற்றும் ஆதலால், அன்மைக்கிளவி அல்லாதபொருளைச் சுட்டுதல் ஆசிரியர் மதமென்று கொள்க' என்று கூறியுள்ளார். சேனாவரையார் பின்னர்க்கூறிய விடை, தெய்வச்சிலையார் தடையைக் குறித்த தென்று உணரப்படுகின்றது. முன்னர்க் கூறிய விடை கல்லாடனார் தடையையோ வேறொருவர் தடையையோ குறித்ததென்று உணரப்படும். தெய்வச்சிலையார் உரையில் 'நின்று வற்றும்' என்றொரு குற்றம் கூறப்பட்டது. அது சேனாவரையர் உரையிலும் காட்டப்பட்டது நோக்கத்தக்கது.

3. 'பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின், ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்' என்பது பற்றித் தெய்வச்சிலையார், அலியென்பது மூவகைப்படும் என்றும், அவற்றுள் ஒன்றாகிய பேடியை அது குறித்ததென்றும் கூறினர். சேனாவரையர் அது அலிமேற் செல்லாதென்றார்.

4. 'மன்னாப்பொருளும் அன்னவியற்றே' என்னும் சூத்திரவுரையுள், இளம்பூரணர் 'மன்னாப்பொருள்' என்பதற்கு உலகத்தில் இல்லாப்பொருளென்று பொருள்கொண்டு, 'பவளக் கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை' யென்பது உதாரணமாகக் காட்டினர். தெய்வச்சிலையார் அதனை மறுத்து 'மன்னாப்பொருள்' என்பதற்கு நிலையாதபொருள் எனப்பொருள்கொண்டு, 'சக்கரவர்த்தி இளமையும் நில்லாது' என்பதை உதாரணமாகக் காட்டினர். சேனாவரையர் இளம் பூரணர் உரையைத் தழுவியுரைத்து, 'இல்லாப் பொருட்கு நிலையுறுதல் இன்மையின் மன்னாப்பொருள் என்றார்' என்று தெய்வச்சிலையார் கூற்றுக்குப் பரிகாரம் கூறினர்.

5. 'எப்பொருளாயினும் அல்லதில்லெனின், அப்பொரு ளெல்லாம் பிறிதுபொருள் கூறல்' என்னும் சூத்திரவுரையுள் சேனாவரையர் 'அல்லதில் என்பதற்குத் தன்னுழை உள்ள தல்லது' என்றும், 'அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல்' என்பதற்கு 'இனப்பொருள் கூறுக' என்றும், இளம் பூரணர் கூறிய உரையை மறுத்துரைத்தார். தெய்வச்சிலையார் உரை இளம்பூரணர் உரைத்தபடியே.

6. 'எடுத்த மொழியினம் செப்பலும் உரித்தே' என்னும் சூத்திரத்திற்கு இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் கூறிய உரை ஒத்த கருத்தினது. 'மேலைச்சேரிக் கோழி அலைத்தது' 'குடங் கொண்டான் வீழ்ந்தான்' என்பன இளம்பூரணரால் இனம் செப்புவதற்குக் காட்டப்பட்ட உதாரணம். 'ஆ வாழ்க' 'அந்தணர் வாழ்க' என்பன இனம் செப்பாததற்குக் காட்டப் பட்ட உதாரணம். தெய்வச்சிலையார் இனஞ்செப்புவதற்குக் காட்டிய உதாரணம் 'தென்சேரிக் கோழிவென்றது' என்பது.

இனஞ் செப்பாததற்குக் காட்டிய உதாரணம் 'அந்தணர் வாழ்க' என்பது. சேனாவரையர் இவ்வுரையை மறுத்துக் கூறியுள்ளார்.

7. 'ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்' என்னும் சூத்திரத்துரையுள், சேனாவரையர் 'புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண்மகன் என்று வழங்குப என்று கூறினர். இது 'விளையாடும் பருவத்துப் பெண்மகளைப் பெண்மகன் என்றல் பண்டையோர் வழக்கு' என்ற தெய்வச்சிலையார் உரைக்கு மறுப்பாகக் காணப்படும்.

8. 'இடையெனப்படுவது' என்னும் சூத்திரவுரையில், சேனாவரையர், தமக்கு முற்பட்ட ஓர் உரையாசிரியரைச்சுட்டி, அவர் 'உரிச்சொற்கிளவி விரிக்குங்காலை' என்னும் சூத்திரத்துப் 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' என்பதற்குப் 'பெயரும் வினையும் சார்ந்து' என்று பொருளுரைப்ப என்று கூறினர். அவ்வுரை இளம்பூரணத்தில் காணப்பட்டிலது, தெய்வச்சிலையார் உரையில் காணப்படுகிறது. அதனால் சேனாவரையரால் ஆண்டுச் சுட்டப்பட்ட உரையாசிரியர் தெய்வச்சிலையார் என்பது பிழையாது.

9. வினை நிரனிரைக்குத் தேய்வச்சிலையார் உதாரணம் எடுத்துக் காட்டவில்லை. அவர் 'வினையும் வினையுமாக வருவன உளவேல் வந்தவழிக் கண்டுகொள்க' என்றார். சேனாவரையர் 'மாசுபோகவும் காய் பசி நீங்கவும், கடிபுனல் மூழ்கி அடிசில் கைதொட்டு' என்பது உதாரணமாகக் காட்டினர். இதனையே நச்சினார்க்கினியரும் காட்டினர்.

10. 'வேற்றுமைத்தொகையே உவமத்தொகையே' என்னும் சூத்திரவுரையிலே, சேனாவரையர், வேற்றுமை உருபும் உவமவுருபும் வினைச்சொல்லீறும் பண்புச்சொல்லீறும் தொகுதலின் தொகையாயின என்பாரும், அவ்வப்பொருண்மேல் இரண்டும் பலவும் ஆகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்பட்த் தம்முள் இயைதலின் தொகையாயின என்பாரும் என

இருதிறத்தர் ஆசிரியர்........இரண்டுசொல் தொக்கன என்பதே ஆசிரியர் கருத்தாம்' என்று கூறினர். இவர் குறித்த இரண்டு கோட்பாடுகளுள் முந்தியது இளம்பூரணர் உரையுட் காணப் படும். பிந்தியது தெய்வச்சிலையார் உரையுட் காணப்படும்.

11. எச்சவியலுள் கூறப்படும் பத்துவகை யெச்சங்களுள் வினையெச்சம் பெயரெச்சம் முதலியன இளம்பூரணர் உரையிற் குறிக்கப்பட்டவாறு, வினையியல் முதலியவற்றுள் கூறப்பட்டன அல்லவென்று தெய்வச்சிலையார் கொண்டு, அவற்றின் இயல்பு வேறாக விரித்துரைத்தார். சேனாவரையர் தெய்வச்சிலையார் கொள்கையை நீக்கி, அவர் எழுப்பிய தடைகளுக்குப் பரிகாரம் கூறி இளம்பூரணர் கொள்கையைத் தழுவினர்.

இனி, தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியருக்கு முற்பட்டவர் என்பது மேற்கூறியவாற்றால் சொல்லாமையே முடியுமாயினும், மயக்கமற வேறு சில சான்றுகளும் எடுத்துக் காட்டப்படும்.

1. 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரவுரையுள் 'இசைக்கும்' என்பதற்கு 'ஒலிக்கும்' என்று ஓர் உரையாசிரியர் பொருள் கூறியதனை நச்சினார்க்கினியர் சுட்டி மறுக்கிறார். ஒலிக்கும் என்று பொருள் உரைத்தவர் தெய்வச் சிலையாரே.

2. 'உயர்திணை' யென்பது பண்புத்தொகையென்று உரையாசிரியர் ஒருவர் கூறிய உரையை நச்சினார்க்கினியர் மறுத்து, அது இறந்தகால வினைத்தொகையேயென்றார். அது பண்புத் தொகை யென்றவர் தெய்வச்சிலையாரே.

3. 'மழவர் ஓட்டிய' என்புழி ஐயுருபு தொகுத்தல் விகாரத்துக்கு உதாரணமாக இளம்பூரணர் காட்டியபடியே, தெய்வச்சிலையாரும் காட்டி, அது எழுத்தோத்தினுள் 'உயர் திணை மருங்கின் ஒழியாது வருதலும்' என்பதனால் முடியா தென்றார். நச்சினார்க்கினியர், அது தொகுத்தல் விகார மன்றென்று விலக்கி, 'உயர்திணைமருங்கின் ஒழியாது வருதலும்' என்புழி, ஒழியாது என்னும் இலேசினால் முடித்துக்காட்டினர்.

4. 'மன்னாப் பொருளும் அன்ன வியற்றே' என்னும் சூத்திரவுரையுள், 'மன்னாப்பொருள்' என்பதற்கு, 'நிலையாத பொருள்' என்று நச்சினார்க்கினியர் பொருள்கூறி, உலகத்தில் இல்லாத பொருளும் என்பதனை எச்சவும்மை என்பதனால் கொண்டு, இளம்பூரணர் கூற்றையும் தெய்வச்சிலையார் கூற்றையும் சேர்த்துக்கூறி, இருவேறு வகைப்பட்ட உதாரணங்களையும் எடுத்துக் காட்டினார்.

5. 'செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிருநிலத்தும்' என்னும் சூத்திரவுரையுள், இளம்பூரணர் பன்னிருநாடு என்பன பொங்கர்நாடு முதலியன வென்றார். அவையெல்லாம் செந்தமிழ் நாட்டின் அகத்தவென்று அவ்வுரையை மறுத்த தெய்வச்சிலையார் 'கன்னித் தென்கரைக் கடற்பழந்தீபம்' முதலிய பன்னிருநாடென்றார். நச்சினார்க்கினியர் அவ்விருவர் குறித்த நாடுகளையும் கூட்டிக்காட்டினார்.

6. இன்னுஞ்சில ஏதுக்கள் யாம் முன்னமே எழுதி இப்பொழிலில் வெளியிட்ட 'தெய்வச்சிலையார் உரையாராய்ச்சி' யில் காட்டினோம். அவற்றை ஆண்டுக் கண்டுணர்ந்துகொள்க.

இத்துணையும் கூறியவாற்றால் தெய்வச்சிலையார் என்பார் இளம்பூரணர் ஒருவர்க்கே பிற்பட்டவர் என்பதும், கல்லாடர் சேனாவரையர் நச்சினார்கினியர் இவர்கட்கு முற்பட்டவர் என்பதும், மய்க்கமற உணர்த்தப்பட்டன.

தெய்வச்சிலையார், சேனாவரையர்க்கும் நச்சினார்க்கினியர்க்கும் பிற்பட்டவர் என்ற குறிப்புரையாளர் கருத்து, அதன் பாயிர வுரையாசிரியர்க்கு உடன்பாடன்று என்பது, 'தெய்வச்சிலையார் சேனாவரையரை அடுத்து வடமொழி யுணர்ச்சி யுடையாரென்று இக்குறிப்புரையாளர் கருதுகின்றார்' என்று அப்பாயிரவுரையுள் அவர் கூறியதனால் அறியப்படும்.

மறுப்பு 33.

(சூ. 1. குறிப்புரை)

['என்மனார் ஆசிரியர் என்று முடியற்பாற்று; முற்றுச் சொல் எச்சப்பெயர் என்பவாகலின்; இது செய்யுள் நோக்கித்

தொகுத்துக் கூறினன் என்பது' என்னும் இளம்பூரணர் உரையுள், 'எச்சப்பெயர்' என்பதற்கு 'எஞ்சிய பெயரையுடைய சொல்' என்பது பொருள் என்றும், 'இங்கு என்மனர் என்னும் சொல் எச்சப்பெயர் என்பது அவிநயனார் மதம் என்றும், அது 'பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே' என்ற சூத்திரத்தின் அடியிலுள்ள தெய்வச்சிலையார் உரையாலும் 'பெயர் வினை உம்மைசொல்' என்னும் நன்னூற் சூத்திரத்தின் அடியிலுள்ள மயிலைநாதர் உரையாலும் நன்கு விளங்கும்' என்றும் குறிப்புரையாளர் கூறினர்.]

இக்குறிப்புரையாளர் இங்கு அடுக்கடுக்காகப் பல பிழைகளைச் செய்தனர். இவர் தாம் செய்யும் பிழைகளைக் குறியாது இங்கே இளம்பூரணப் பதிப்பாசிரியர்பால் பிழையைச் சுமத்த முயன்றது வியப்பினும் வியப்பேயாம்.

'ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.'

இனிக் குறிப்புரையாளர் பிழைகள்.

1. 'எச்சப்பெயர் என்பதற்கு எஞ்சிய பெ்பரையுடைய சொல் என்பதுபொருள்' என்றது.

2. என்மனர் என்னும் சொல் எச்சப்பெயர் என்பது அவிநயனார் மதம் என்பது.

3. இளம்பூரணர் அவிநயனார் மதத்தைத்தழுவி, என்மனர் என்பது எச்சப்பெயர் என்றார் என்பது.

4. எச்சப்பெயர் என்பதன் உண்மைவழக்காறு அறியாமை.

5. 'முற்றுச்சொல் எச்சப்பெயர்' என்ற வழக்கிற்கு மூலம் அறியாமை.

இனி இவற்றிற்கு மறுப்புவருமாறு:—'பெயர்வினை உம்மை சொல் பிரிப்பென ஒழியிசை' என்னும் நன்னூற் சூத்திரவுரையுள்ளே, மயிலைநாதர் பத்துவகைப்பட்ட எச்சங்களைப்

பற்றியும் அவிநயவுரையாசிரியர் இராசபவித்திரப் பல்லவ கருத்துரை தரையர் இன்னதென்றும், அதற்கு வேறாக இளம்பூரணர் கொண்ட கருத்துரை இன்னதென்றும் உரைத்து, இரு வகைக் கருத்துரைப்பற்றியும் உதாரணங்கள் வெவ்வேறாகக் காட்டினர். ஆகவே இளம்பூரணர் கருத்து அவிநயனர் கருத்தின் வேறானதென்பது மலையிலக்கு. உதாரணமாகப் 'பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே' என்னும் எச்சவியற் சூத்திரத்தில் பெயரெஞ்சுகிளவி என்பது வினையியலுள் ஓதப்பட்ட பெயரெச்சம் என்பதன்றி வேறன்றென்று கூறி, உண்ணும் ஊண் என்பதை உதாரணம் காட்டினர்.

அவிநயனர் கொள்கையுடையாரும் தெய்வச்சிலையாரும் தொடர்மொழிகளிலே எழுவாய், செயப்படுபொருள் முதலிய பெயர்தொக நிற்கும் சொற்களைப் பெயரெஞ்சு கிளவியென்றார். ஆகவே இளம்பூரணர், அவிநயனர் மதத்தைத் தழுவி என்மனர் என்பது எச்சப்பெயரென்றார் என்பது மலையிடறென்க. 'எச்சப் பெயர்" என்பதற்கு 'எஞ்சிய பெயரையுடைய சொல்' என்பது பொருளென்றார் குறிப்புரையாளர். எச்சப்பெயர் என்னும் தொகைச்சொல் இவ்வாறு விரித்துரைக்கப்படும் வழக்கை அவர் எவ்விலக்கண நூலில் கண்டனரோ? அவ்வாறே அவர் 'என்மனர் என்னும் சொல் எச்சப்பெயர்' என்பது அவிநயனர் மதம் என்றார். இவையெல்லாம் பொருளொடுபடாத பிதற்றுரையாகலின் பொருளிலமொழிதல் என்னும் குற்றத்தின்பாற்படும் என்க.

இதனால் இவர் தெய்வச்சிலையார் உரையையும் மயிலைநாதர் உரையையும் செவ்வன் ஆராயாமை வெளிப்படுத்தினர். அது நிற்க.

'அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்.' என்னும்

இறையனர் களவியற் சூத்திரத்துரையிலே, 'என்மனர்' என்னும் சொற்பற்றி இலக்கணம் கூறப்புகுந்த நக்கீரனர் கூறியது பின்வருமாறு :—

'என்மனார் என்பது என்ப என்னும் முற்றுச்சொல் 'குறைக்கும்வழிக் குறைத்தல்' என்பதனால் பகரம் குறைந்து,' 'விரிக்கும்வழி விரித்தல்' என்பதனால் மன், ஆர் என்பன இரண்டு இடைச்சொற் பெய்துவிரித்து, என்மனார் என்று ஆயிற்று. என்மனார் என்பது புலவர் என்னும் பெயர் கொண்டு முடிந்தது; முற்றுச்சொல் எச்சப்பெயர்கொண்டு முடியும் ஆகலின், என்பது."

இங்ஙனம் நக்கீரனார் ஆண்டு உரைத்த இலக்கணக் குறிப்பை இளம்பூரணர் தழுவி யெடுத்துக்கொண்டு, ஈண்டு 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்புழி வந்த 'என்மனார்' என்னும் சொற்பற்றி அதனைப் பெய்துரைக்க லுற்றார். 'என்மனார் என்பது, என்ப என்னும் முற்றுச் சொல்லைக் 'குறைக்கும் வழிக் குறைத்தல்' என்பதனால் பகரம் குறைத்து, 'விரிக்கும் வழி விரித்தல்' என்பதனால் மன்னும் ஆரும் என்பன இரண்டு இடைச்சொற் பெய்து விரித்தான். என்மனார் ஆசிரியர் என்று முடியற்பாற்று. முற்றுச்சொல் எச்சப்பெயர் என்பவாகலின், இது செய்யுளுறைக்கித் தொகுத்துக் கூறினான் என்பது' என்பது இளம்பூரணர் உரைப்பதிப்பில் காணப்பட்டுள்ளது. இவ்வுரையை மேற்கண்ட நக்கீரனார் உரையோடு பொருத்திநோக்கின், இளம்பூரணர் உரையிலே, 'முற்றுச்சொல் எச்சப் பெயர்கொண்டு முடியும் என்ப ஆகலின்' என்று எழுதப்பட்டிருந்தது, பின் ஏடெழுதினோர் தவறுதலால் கொண்டு முடியும் என்னும் இருச்சொற்கள் விடப்பட்டன வென்று உணர்ந்து கொள்ளுதலே முறையாகும்.

இளம்பூரணர் உரை எல்லாவற்றினும் மிகப்பழைமை யானது என்பதும், அது காலத்தினால் உருபு சிதைந்தும் உறுப்புக் குறைந்தும் உயிர் மெலிந்தும் போயினமையாலே, அதனை ஆறுமுக நாவலர், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், மகாலிங்கையர், தாமோதரம் பிள்ளையவர்கள், சாமிநாதய்யர் முதலிய பெரும்புலவர்களெல்லாம், அச்சிற் பதிப்பித்தற்கு மயங்கினர் என்பதும், நோக்கின் அக்குறையுடலுக்கு இப் போழ்து வலிகொடுத்து அது உயிர்நிலைத்து வெளியுலாவச்செய்த

பெரும் புலவராகிய நமசிவாயமுதலியாரவர்களுடைய நன்றி நம் மனோரால் எழுமையும் பாராட்டப்படுவதற்குரியதொன்றாகுமே யன்றி, நரைத்துப் பழுத்துப் பல்லுதிர்ந்து தளர்ந்து மூப்புற்றாரைக் கோலொன்று கொடுத்து நடக்கச் செய்தார்மேல் அன்னோரைக் காளைப் பருவத்தினராகச் செய்திலர் என்னும் பழியைச் சுமத்தல் செய்நன்றி கோறலாக முடியுமென்க.

இனி '.உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கும், 'அன்பினைந்திணை....என்மனார் புலவர்.' என்னும் களவியற் சூத்திரத்துக்கும், எழுவாய் பயனிலை முடியில் சிறிது வேற்றுமை உண்டு. களவியற் சூத்திரத்திலே 'என்மனார்' என்னும் முற்றுச்சொற்குப் 'புலவர்' என்னும் எழுவாய் வெளிப்பட நின்றது. தொல்காப்பியச் சூத்திரத்திலோ 'என்மனார்' என்னும் முற்றுச் சொற்கு எழுவாய் வெளிப்படாமலே நின்றது. இங்ஙனம் எழுவாய் வெளிப்படாது நிற்றலும் உரித்து என்பதற்கு விதி,

> 'எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
> அவ்வியல் நிலையல் செவ்விதென்ப.'

என்னும் வேற்றுமையியற் சூத்திரம்.

வினை முற்றுப் பெயர்கொண்டு முடியவேண்டும் என்பதற்கு விதி,

> 'அவைதாம், தத்தங்கிளவி அடுக்குந வரினும்
> எத்திறத்தானும் பெயர் முடிபினவே' என்னும்

எச்சவியற் சூத்திரம்.

இனி இங்ஙனம் பயனிலை வெளிப்படத்தோன்றி நிற்கவும் எழுவாய் தோன்றாது நிற்குமிடங்களிலே, நச்சினார்க்கினியர் முதலியோர் அதனைத் 'தோன்றா எழுவாய்' எனக்கூறி மேற்கூறிய 'எவ்வயிற் பெயரும்' என்னும் சூத்திரத்தில் 'செவ்விதென்ப' என்ற இலேசினாலே, எழுவாயை வருவித்து முடித்துக் காட்டுவர். சேனாவரையர், பரிமேலழகர், சிவஞானமுனிவர், அதைச் 'சொல்லெச்சம்' எனக்கூறி வருவித்து முடித்துக் காட்டுவர். தெய்வச்சிலையார் முதலியோர் அதை எச்சவியலுள்

ஓதப்பட்ட 'பெயரெஞ்சு கிளவி' என்று கூறி வருவித்து முடித்துக் காட்டுவர். உரையாசிரியர் இளம்பூரணருடைய கொள்கை, மேற்கூறிய மூன்று வகையினுள்ளே முதலாவதே யாம். அவரது கொள்கை அவிநயனார் கொள்கையின் வேறு பட்டதொன்றே. அவிநயனார் மதத்தை ஒருவாறு தழுவியுரைத் தவர் தெய்வச்சிலையாரே. ஆகவே இத்துணையும் கூறியவாற்றால் இளம்பூரணர் அவிநயனர் மதம்பற்றி, முற்றுச்சொல் எச்சப் பெயர் கொண்டு முடியும்' என்றார் என்ற குறிப்புரையாளர் கூற்றுப் பிழைபடுதல் விளக்கப்பட்டது.

இனி, நக்கீரனாரும் இளம்பூரணரும் தத்தம் உரையிலே எடுத்தாண்ட 'எச்சப்பெயர்' என்பதுபற்றித் தொல்காப்பிய நூலில் ஆசிரிய வசனம் உள்ளதோ என்றுபார்த்து, உளதாயின் ஆசிரியர் கருத்து யாதோவென ஆராய்தல் நம்கடமையாகும்.

(தொடரும்.)

பிழை—திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
434	6	என்றும்	என்னும்
435	27	சுட்டல்அன்றி	சுட்டல்....அன்றி
,,	28	பயனிலையே	பயனிலையே'
440	9	திருக்குறளுள்	திருக்குறள் முதலிய [வற்றுள்
443	8	கூறுமாறு	கூறி, மாறு
444	20	போதாது	போதா
480	7	தகாவிருக்க	தாகவிருக்க

அழுமூஞ்சிச் செல்லையா.

[இது, தஞ்சை திரு. பேதுரு உயர்தரப்பள்ளிக் கூடத்தில் நடைபெறும் Petrinian என்ற பத்திரிகைக்காக எழுதப்பட்டது.]

நமது டேவிட் செல்லையா இரண்டரை ஆண்டுகளின் முன் மாயூரத்திலிருந்து தஞ்சைக்கு வந்து, நமது பள்ளிக்கூடத்தில் மூன்றாவது பாரத்தில் சேர்ந்தபோது, அவன் பெயர் இவ்வாறு ஒரு கட்டுரையின் தலைப்பாக (Heading) நிற்கும் பெருமையினை அடையுமென நினைத்தவர் ஒருவருமில்லை. ஆனால் ஒன்று; அவன் வந்து சேர்ந்து ஒருமாதம் ஆனபோதே, அவன் வகுப்பு உபாத்தியாயர் என்நண்பர் திரு. எக்கியசாமி ஐயரவர்கள், நல்ல பிள்ளைகளைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தபோது, தம்வகுப்பிலுள்ள செல்லையா என்னும் ஒரு மாணவனுடைய குணச் சிறப்புக்கள் மெச்சத்தக்கவையா யிருக்கின்றன என்று என்னிடம் சொல்லியதுண்டு. அது முதல் அம்மாணவனைக் கண்டு, அவன் குணச்சிறப்புக்களை அறிந்து மகிழ வேண்டும் என்னும் அவா என் உள்ளத்தில் வேரூன்றியது. மேல் வகுப்பு வேலைகளிலேயே ஈடுபட்டிருக்கும் எனக்கு, நிலாவினை வீசும் இளமதி போல ஒளிவீசும் முகமுடைய இளஞ்சிறார்களடங்கிய இரண்டாவது மூன்றாவது பாரங்கட்குக் கற்பிக்கும் பேறு கிடைப்பதில்லை. அவ் வகுப்புகளுக்குரிய ஆசிரியர்களாகிய என் நண்பர்கள் எவரேனும் வாராதிருக்கும், எந்த நாள் எந்த நேரத்திலாவது அந்தப் பேற்றினை அடையலா மென்றிருந்தாலும், அந்தந்த நேரங்களிலெல்லாம் என் சொந்த வேலை குறுக்கிட்டுத் தடைசெய்யாதிருப்பதில்லை. திருவருட்செயலால், எவ்வாறோ ஒரு நாள் ஒரு நேரம், செல்லையாவிருக்கும் மூன்றாவது பாரம் ஏ. பிரிவிற்குப் போகும் பேறு எனக்குக் கிடைத்தது. அப்போது, என் நண்பர் திரு. ஐயரவர்கள் கூறிய செல்லையா என்னும் மாணவன் யாரென அறிந்துகொள்ள முயன்றேன். செல்லையா என்னும் மாணவன் யார்? என நேர்முகமாகக் கேட்பது, மாணவர்கட்கு ஒருவகைப் புதுமை ஆவலினை

(Curiosity) உண்டாக்கிப் பலவகையான கேள்விகளுக்கும் இடந் தருமாகையால், மறைமுகமாகக் கேட்டறிய நினைத்து, ஒவ்வொருவர் பெயரையும், தெரிந்துகொள்ளக் கேட்பதுபோல், கேட்டு வந்தேன். ஆ! நினைத்ததொன்று; நடந்ததொன்றாயிற்று! அவ்வகுப்பில் மூன்றுபேர் செல்லையா என்ற பெயருடையவர்கள் இருந்தனர்.

ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்;
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்;
எனையாளும் ஈசன் செயல்

என்ற நமது பாட்டியார் திருமொழி என் நினைவில் தோன்றிப் புன்னகையை உண்டாக்கிற்று. அதன்மேல், நான், நல்லது, இரண்டு மூன்றுபேர் செல்லையா, தங்கவேலு என்ற பெயருடையவர்களாயிருக்கின்றார்களே. அவரவர்களை விளக்கமாகத் தெரிந்துகொள்ளவேண்டாமா? ‘இனிஷியல்’ (Initial—முதற் குறிப்பெழுத்து) முதலிய ஏதேனும் அடையாளம் வேண்டுமே என்றேன். உடனே, ப. கிருஷ்ணமூர்த்தி என்ற ஒரு மாணவன் எழுந்து, ‘நான் சொல்லுகிறேன் ஐயா, அவன் ஆல்பர்ட் செல்லையா; அவன் ஆர்தர் செல்லையா; இதோ இவன் அழுமூஞ்சிச் செல்லையா என்று கூறினன். ‘அழுமூஞ்சிச் செல்லையா’ என்று அவன் அடையாளம் சொன்னபோது எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். அச்செல்லையா மாத்திரம் நாணியிருந்தான். அப்போது நான் மிக்க வியப்படைந்து, இதென்ன புதுவகைப் பெயராயிருக்கின்றதே! வரலாறு என்னவென்று கேட்டேன். அவன், ‘அதுவா ஐயா, முன்னொருதரம் எங்கள் இளைஞர் (Junior) மீட்டிங்க் கூட்டத்தில் இந்தச் செல்லையா இரக்கம் என்கின்ற ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசினான். அப்போது இவன், சிறுவர்கள் பொன் வண்டுகளைப் பிடித்துக் காலை முரித்தும் முள்ளேற்றியும் வெய்யிலில்வைத்துச் சுட்டுச் சுற்றியும் இவ்வாறெலாம் இரக்கமின்றிக் கொடுமை செய்வதைக் கண்டித்துப் பேசினான்; இன்னும் பறவைகளின் குஞ்சுகளைக் கூட்டிலிருந்து எடுத்துக்கொண்டுவருதலையும்

அவற்றைக் கொன்றெறிவதையும் கண்டித்துப் பேசினன்; இன்னும் நாய்களையும் பன்றிகளையும் வளைத்துக் கல்லெறிந்து காயமாக்குவதையும் தவளைகளைக் கல்லெறிந்து கொல்வதையும் ஓணான்களை அடித்துக் கொல்வதையும் இன்னும் இம்மாதிரியான பல கொடுமைகளையும் எடுத்துக் காட்டிக் கண்டித்தான். அங்ஙனம் அவன் பேசி வரும்போது அடிக்கடி பெருமூச்சுவிட்டும் கண்ணீர் வடித்தும் அழுதழுது பேசியதனல், அப்போது மாணவர்கள் வைத்த பெயர் ஐயா அது' என்று கூறினன். அழுமூஞ்சிச் செல்லையா என்ற பெயர் வந்த காரணம் இதுதானு! மிக நன்ருயிருக்கிறதே! என்றேன். இதே செல்லையாதான் திரு. ஐயரவர்கள் கூறிய செல்லையாவாகவேண்டும் எனத் துணிந்துகொண்டேன்.

அதன்பின், நான், நல்லது, என் இனிய மாணவர்களே! இங்கே கொஞ்சம் நோக்குங்கள்! செல்லையாவுக்குக் கிடைத்திருக்கும் இத்தகைய பெயர், எல்லோருக்கும் எளிதிற் கிடைக்காது. ஒருவன் தவம் செய்து பெறவேண்டிய பெயர் இது. நீங்கள் செல்லையாவுக்கு வைத்த பெயர் விளையாட்டுப் பெயர் ஆயினும், அது உண்மையில் மிக உயர்ந்த பெயராகும். இப்பெயர் மிக்க இரக்ககுணமுள்ளவன் என்பதைக் காட்டுவதாகும். அழுகையின் பெருமை உங்கட்குத் தெரியாது! எளிதாக விளங்க ஒன்று சொல்லுகிறேன். ஒரு வீட்டில் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. பல அன்பர்கள் பார்க்க வருகின்ருர்கள். வந்தவர்கள் எல்லோரும் என்ன கேட்கின்ருர்கள்? அம்மா! குழந்தை நன்ருக விருக்கிறதா, அழுகிறதா, என்று கேட்பார்களா? அன்றிக் குழந்தை சிரிக்கிறதா என்று கேட்பார்களா? இன்னும் பாருங்கள். அந்தக் குழந்தை அழுதால் எல்லாரும் மகிழ்கின்ருர்கள்; சிரிக்கின்ருர்கள். அது அழாமற் கிடந்தாலோ யாவரும் கவலையடைகிருர்கள்; அழுகிருர்கள். இன்னும் சற்று ஊன்றிப் பாருங்கள்! நம்மைப் பெற்று வளர்த்தவர்கள், நமது முன்னறி தெய்வமாகிய அன்னைமார்கள். ஆயினும் அந்த அன்னைமார்களுக்கு நமது குறைகளை எடுத்துக்காட்டி நம்மை வளர்த்து வந்தது எது? நமக்கோ, ஆங்கிலமோ, தமிழோ,

உருதோ அப்போது தெரியாதே! பேசவே தெரியாதே! நமது குறைகளை நமது அன்னைமார்களுக்குக் காட்டிய துணை எது? நமது அழுகையா? அல்லது சிரிப்பா? நாம் அழுதழுதன்றோ நமது குறைகளை அன்னைமார்கட்குத் தெரிவித்தோம். எனவே, நமது அன்னைமார்களாகிய முதற்றெய்வங்களைவிட, நமக்குச் சிறந்த தெய்வம், நம்மை மேற்கூறியவாறு வளர்த்து வந்த அருட்டெய்வமாகிய **அழுகைத் தேய்வமன்றோ!** என் அரிய மாணவர்காள்! தமிழ் மொழியில் பழமை பெருமைகளில் ஒப்பு உயர்வு அற்று விளங்கும் **தோல்காப்பியம்** என்ற நூலில், **இரக்கமானது அழுகை** யென்றே சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த அழுகையே—இரக்கமே—கல்மனத்தைக் கரைப்பது; பகைமையை ஒழிப்பது; நட்பை உண்டாக்குவது; பாவத்தைக் கழிப்பது; அறத்தை வளர்ப்பது; தெய்வத்திருவருளைச் சேர்ப்பது. இந்த அழுகையின் பலத்திற்கு அரசன் கோட்டை கொத்தளம் படைகொடி பெல்லாம் எதிர் ஆகா. கொடுங்கோலரசன் கீழ்வருந்தும் குடிகள், அக்கொடுங்கோலால் துன்பப்பட்டு, அதைத் தாங்க முடியாமல் அழுகின்ற கண்ணீரே, அக்கொடுங்கோலரசன் படை முதலாய செல்வங்களையெல்லாம் தொலைக்கும் படையாகும் என்ற கருத்தில், நமது தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், **அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே—சேல்வத்தைத் தேய்க்கும் படை** என்று கூறியிருக்கின்றனர். இதனால் அழுகையின் வலிமையை அறிந்தீர்களன்றோ!

இந்த அழுகை இரண்டு வகைப்படும். ஒன்று மிக மட்டமானது, ஒன்று மிக வுயர்ந்தது. ஒருவன் தான் அடையும் துன்பங்கள் பற்றி வருந்தி அழுவது முன்னது. ஒருவன் உலகம் அடையும் துன்பங் கண்டிரங்கி அழுவது பின்னது. இந்த இரண்டாவது வகையினதாகிய அழுகையை—இரக்கத்தை—உடையவர்களே அறிஞர்கள், ஞானிகள், மகாத்துமாக்கள், அவதார புருடர்கள் ஆவார்கள். ஒரு ஊரில் ஒரு காலத்தே ஒரு பஞ்சம் வந்தது. ஒருவன், தன்வயல் விளையவில்லையே, தன் குடும்பத்திற்கு அடுத்த ஆண்டிற்கு வேண்டிய

நெல் இல்லையே என்று வருந்துகிறான். ஒருவரோ, அந்தோ, ஊரெல்லாம் விளையவில்லையே! ஊரார் எல்லோரும் அடுத்த ஆண்டிற்கு என்ன செய்வார்கள் என்று வருந்துகிறார். இவ்விருவரில் முன்னவன் பொதுமகன் என்றும், பின்னவர்சான்றோர் என்றும் கூறத்தக்கவர். இன்னும் பாருங்கள். இவ்விருவகையோர் வேறுபாடுகளை எடுத்துக் காட்டுகிறேன். ஒருவன் மேற்கூறியவாறுள்ள இருவகையோர்களையும் இகழ்ந்து பேசுகிறான் என்று வைத்துக்கொள்வோம். முதலிற் கூறிய பொதுமகன் என்பானோ தன்னை இகழ்ந்தது குறித்து வருந்துகிறான்; தானும் இகழ்ந்து பேசுகிறான். பின்னர்க் கூறிய சான்றோரோ, அவன் இகழ்ந்ததைப் பொறுத்துக்கொள்ளுகிறார்; தம்மை ஒருகாரணமுமின்றி இகழ்ந்த காரணத்திற்காக இகழ்ந்தவன் நரகம் அடைவானே என்று நினைத்துப் பரிந்து அவ்வாறடையாதிருக்க, இறைவனிடம், வருந்திக் கண்ணீர் சொரிந்து நின்று பொறுத்தருளவேண்டுகிறார். இச்சான்றோர் செயலை,

தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றியுமற்(று)
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை*
எரிவாய் நிரயத்து† வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்

என்ற நாலடியாரின் அருமைச் செய்யுளால் அறியலாம். இன்னும் பாருங்கள். ஒருவன் ஒரு பொதுமகனையும் சான்றோர் ஒருவரையும் அடிக்கிறான். பொதுமகன், தன் உடம்பு துன்புற்றதற்கு இரங்கித் துன்பக் கண்ணீர் விட்டு வருந்துவான். சான்றோரோ, அந்தோ, தம்மை அடித்த குற்றத்திற்காக இவன் ஆண்டவனால் தண்டிக்கப்படுவானே என்று நினைத்து இரங்கி அருட்கண்ணீர் சொரிந்து வருந்துவார். மேலும், அதுபற்றி இறைவனிடம் பொறுத்தருளல் வேண்டியும் நிற்பர். இங்கே இவ்விருவகையோரும் வருந்துவதுண்டு. ஆயினும் அவற்றின் வேறுபாடுகளை நோக்குங்கள். இதனை,

அறிஞரும் அறிவிலாரும் அபலுளோர் இபற்றலாகும்
உறுதுயர் உழப்பார்; ஒத்தும் ஒத்திலர்; ஒன்னலார்‡ மேற்

---

* உம்மை—மறுமை. † நிரயம்—நரகம். ‡ பகைவர்.

பிறிதுறும் இடர்க்கு நோவர் பெருமையோர்; மற்றையோர்தம்
வறிதுறும் உடலில் தாக்கும் வன்துயர்க்கு அழிவர் மாதோ!

என்ற அருமைச் செய்யுளால் அறியலாம். இது வரையும் காட்டியவற்றால், நாம் அறிந்துகொண்ட தென்ன? பெருமை மிக்க சான்றோர், உலகத்தார் அடையும் துன்பங்கட்கு இரங்கி வருந்துவரென்றும், கண்ணீர் வடிப்பர் என்றும் கண்டோம். நமது மகாத்துமா காந்தி படாதபாடெல்லாம் பட்டாரே, படுகின்றாரே! எதற்காக? தம் குடும்ப நன்மைக்காகவா? உலக நன்மைக்காகவன்றோ? ஏழை எளியவர்கட்காக வன்றோ? நமது மாணிக்கவாசக சுவாமிகட்கு, அழுதடியடைந்த அடிகள் என்பது பெயராகும். அவர், அழுதழுது கூறியிருக்கும் பாக்களெல்லாம், உலகத்தார் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்ளக் கூறிய அரிய அமிழ்தங்களலவோ! ஏசுநாதருக்கு, வியாகூலசாமி என்றதோர் பெயருண்டு. தேவகுமாரராகிய அவர் ஏன் வியாகூலப்பட்டார்? உலகத்தார் பாவங்களை நினைத்தன்றோ? ஒரு காலத்தே உலகில் அறியாமை மிகுந்தது; பேராசைக்காரர் நிறைந்தனர்; ஏழை எளியவர்கள் வருந்தினர்; அவர்கள் வருத்தத்தை நீக்கவும் உண்மையான தெய்வ நெறியைக் காட்டவும் ஏசுநாதர் எண்ணினர். பல அரிய கற்பனைகளைச் செய்தனர். அவற்றால் நன் மக்கள் நன்னெறிகளை அறியத் தலைப்பட்டனர். பேராசைப் பேய்களுக்கு வாயில் மண்விழும் என்பது தோன்றிற்று; ஏசுநாதரைப்பகைத்தனர், கொல்லச் சூழ்ச்சிசெய்தனர். சிலுவையில் அறைந்து கொன்றனர். இங்குப் பாருங்கள்! தம்மைக்கொல்ல நினைக்கிறார்கள் என்று அறிந்த காலத்தே, தம்மைப் பிடித்த காலத்தே, தம்மை மன்றத்தே நிறுத்திய காலத்தே, தம்மைக் கொல்ல எதிரிகள் தூண்டிய காலத்தே, தம்மை இகழ்ந்து துப்பி அடித்த காலத்தே, தம்மைச் சிலுவையைத் தூக்கிபோகச் செய்து நலிந்த காலத்தே, தம்மைச் சிலுவையில் அறைந்த காலத்தே, தமது இரத்தம் ஆறாக ஓடி மலையும் மண்ணும் அழுததுபோற் காணப்பட்ட காலத்தே, அவர் எதற்காக வருந்தினர்? எதற்காக அழுதனர்? தமது தந்தையினிடத்திலே அவர் கேட்டுக்கொண்டதென்ன?

"பிதாவே! இவர்களை மன்னித்தருள்க! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" என்னும் பொன்மொழி களன்றோ! இன்னும் ஒரு மேற்கோள். இராமபிரான் நாட்டை விட்டுக் காட்டுக்குப் போயிருக்கின்றார். அருமந்த மைந்தனைப் பிரிந்த பிரிவால் உள்ள முடைந்து தசரதன் விண்ணுலகு உற்றான். அச்செய்தியை அக்காட்டில் அவர் அறியலானார். தம் இனிய தாய் தந்தையர்களை இழப்பதினும் மக்களுக்குப் பெருந்துயர் ஒன்றுண்டோ? கேட்ட இராமர் துயரக்கடலுள் ஆழ்ந்தார். வாய்விட்டுப் புலம்புகிறார். என்ன புலம்புகிறார்? 'ஐயையோ அப்பா! அருந்தவத் தால்என்னைப்-பெற்றாயே வளர்த்தாயே பேசக்கற்றுத்தந்தாயே! காப்பி பலகாரம்கணக்கு வழக்குண்டா? பருப்பு நெய் சோறு பால்தயிருக் கெல்லை யுண்டா? சர்ட்களோ கோட்டுகளோ சார்ட்டுகளோ எல்லை யுண்டா? காலர்களும் டையும் கணக்கு வழக்குண்டோ? காசோ பணமோ கையிரண்டும் பற்றாவே! பாழும் படிப்புக்குப் பணத்தை இறைத்தாயே! வாராச் சனியதற்கு வாரி யிறைத் தாயே! ஐயையோ அப்பா! ஆரினிமேல் அவ்வாறு—சீராட்டிப் பாராட்டிச் செல்வமாய் வளர்ப்பார்கள்! என்றெல்லாம் செல்லும் இக்காலத்து ஒப்பாரி ஒன்று வைத்தாரா? இல்லை, இல்லை. அவர் கூறியது :—

நந்தா விளக்கனைய நாயகமே! நானிலத்தோர்
தந்தாய்! தனிஅறத்தின் தாயே! தயாநிலையே!
எந்தாய்! இகல்வேந்தர்! ஏறே! இறந்தனையே!
அந்தோ! இனிவாய்மைக்கு ஆர்உளரே! மற்றென்றான்.

என்பதாகும்.

இந்தப் பாட்டில், என்றும் குன்றாத புகழ் அடைந்ததனால், ஒரு நாளும் ஒழியாத விளக்காகிய ஞாயிறு போன்ற தலைவனே! உலகத்தார் தந்தையே! ஒப்பில்லாத அறத்தின் தாயே! அருளின் இருப்பிடமே! அயோத்தியின் குடிகளாகிய எங்களுக் கெல்லாம் தந்தையாகிக் காப்பவனே! எங்கள் பகை வர்களை அழிக்கும் சிங்கமே! நீ இறந்தாயாகில், உலக நன்மைக் கும் உலகம் நடை பெறுதலுக்கும் ஒரு முதற்பொருளாயுள்ள

வாய்மையைக் காப்பாற்ற இனி யார் இருக்கின்றார்கள்! என்ற உயரிய கருத்துக்கள் பொதிந்து அழகு ஒழுகுவதை நோக்குங்கள்.

நல்லது மாணவர்களே! இங்ஙனம் தெய்வத்திருவினர்களிடத்தில் காணப்படும், தன்னைப்பற்றாத உலகத்தைப்பற்றிய, இரக்கமாகிய அழகை நமது அருமைச் செல்லையா விடத்தில், இந்த இளம் பருவத்தில் அருமையாகக் காணப்பட்டதும், அது பற்றி, அறிந்தோ அறியாமலோ, நீங்கள் அழுமுஞ்சிச் செல்லையா வென்று தக்கதோர் பெயர் வைத்ததும், எனக்கு மிக்க மகிழ்ச்சியைத்தருகின்றன. செல்லையாவின் இன்னுரையை அன்று உங்களுடன் இருந்து கேட்காததுதான் எனக்கு மிக்க வருத்தமாகவிருக்கிறது என்று கூறி முடிக்கப்போனேன்.

அப்போது க. சுப்பிரமணியன் என்னும் ஒரு மாணவன் எழுந்து, செல்லையா அன்று பேசியபோது ஒரு சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு விழித்தான் ஐயா என்றான். இதென்ன பஞ்சதந்திரம்போல ஒன்றின்பின் ஒன்றாகத்தொடர்கிறதே என நினைத்து, அதென்னவென்று கேட்டேன். செல்லையா இந்தக் காலத்துச் சிறுவர்களே இம்மாதிரியெல்லாம் சிறு பிராணிகளை இரக்கமின்றி வருத்துகிறார்கள். பண்டைக்காலத்திலிருந்த நமது முன்னோர்களெல்லாம் இளம் பருவத்தில் இம்மாதிரியெல்லாம் செய்ததில்லை என்று பேசிப் போகும்போது, 'கு. கோவிந்தசாமி' என்ற கெட்டிக்காரப் பையன் எழுந்து, 'கல்லைக் கண்டால் நாயைக் காணோம் நாயைக்கண்டால் கல்லைக் காணோம்' என்ற பழமொழி யிருக்கிறதே. பழமொழியென்றால் பண்டைக் காலத்துச்சொல் என்று தானே அருத்தம்? இது பண்டைக் காலத்துச் சிறுவர்களைப் பற்றியதுதானே? இதற்கு என்ன சொல்லுகிறாய்! என்று கேட்டான். செல்லையா விழித்தான்; அதற்கு ஒன்றும் விடை சொல்லாமலே, தான் பேசினதைத் தொடர்ந்து ஏதோ பேசி முடித்துவிட்டான் என்றான்.

அது கேட்டு வியந்து, நான், நல்லது மாணவர்களே! இந்தப் பழமொழிப் பேச்சு வந்திருப்பதால், அதை உங்கட்கு விளக்கிச்

சொல்லவேண்டியவனாகின்றேன். இது மிக அருமையான பழமொழி; சித்தர்கள் திருமொழிபோலிருக்கிறது. சித்தர்கள் திருமொழிகள் மேலாகப் பார்த்தால் எளிய பொருளைக்கூறுவன போலிருக்கும். ஆழ்ந்து பார்த்தால் சிறப்பான உட்பொருளுடையனவாகக் காணப்படும். நான் ஒருஅமயம் இராமேசுவரம் போய் வந்தேன். வரும் வழியில் இராமநாதபுரத்தில் இறங்கி, அங்குள்ள மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவராகிய தமிழ் மன்னரைப் பார்த்துவரப் போனேன். அரண்மனையின் கொலு மண்டப வாயிலை ஒட்டிக் காவல் செய்வனபோல் இரண்டு பெரிய நாய்கள் படுத்திருந்தன; பார்த்ததும் சற்றுத் தயங்கினேன். ஏனெனில் அவைகள் என்னை எதிர்ப்பனபோல அவ்வளவு கடுமையான பார்வையுடையனவாயிருந்தன. பிறகு சிறிது நேரத்திற்குள்ளேயே என் எண்ணம் வேறுபட்டது. அவைகள் ஒரே இடத்தில், ஒரே வண்ணமாக, அசைவற்றுக் கிடப்பதைக் காணக்காண, அவைகள் உண்மையான உயிர் நாய்கள் அல்ல, செயற்கை நாய்கள் என நினைக்க வேண்டியவன் ஆயினேன். மெல்லமெல்ல அருகே சென்றேன். ஓ! நான் எண்ணியபடியே செயற்கை நாய்களே அவை எனக் கண்டபோது நான் அடைந்த வியப்பிற்கு அளவேயில்லை. அவைகளை ஊன்றிப்பார்க்க, அவைகள் சலவைக் கற்களால் உயிர் நாய்களைப்போலவே அவ்வளவு வேலைப்பாட்டுடன் செய்யப்பட்டிருத்தலைக்கண்டு மகிழ்ந்து வியந்தேன். பாருங்கள் மாணவர்களே! நான் அவைகளை முதலில் உண்மையான நாய்கள் என்று நினைத்தபோது, அவைகள் கற்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை. பின் நான் அவைகளைக் கற்கள் என்று தெரிந்துகொண்டபோது, உண்மையான நாய்கள் என்ற எண்ணம் என்னைவிட்டு நீங்கிவிட்டது. நான் முதலில் நாயைக் கண்டேன்; கல்லைக்காணேன். பின் கல்லைக்கண்டேன்; நாயைக் காணேன். இப்பொழுது அந்தப் பழமொழியினை, நம் செல்லையாவை விழிக்கச் செய்த அந்தப் பழமொழியினைப் பாருங்கள்; கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக்காணோம் என்ற அப்பழமொழியின் கருத்து

உங்கட்கு இதுபோது விளங்கிற்றல்லவா? இன்னும் இது நன்கு விளங்க, இதை ஒட்டி உங்கட்குக் கூறவேண்டியது ஒன்றுண்டு.

திருமூலர் என்பவர் ஒரு பெரியார், முனிவர் (ஞானி). அவர் மாடுகளை வளர்க்கும் தொழில் செய்து வந்த இடையர். இந்தக் காலத்தில் 'உத்தியோகம்' 'உத்தியோகம்' என்று ஒன்றையே நாடி, அதுபற்றி மக்கள்படும் அல்லல்களுக்கு அளவில்லை. எங்குப் பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம்; அது பற்றிய ஆரவாரக்கொண்டாட்டம். முதலாளிகள் சம்பளங்களை நறுக்குதல்; அதுபற்றி வேலையாளர் முறுக்குதல். இவ்வாறான தொல்லை பண்டைக்காலத்தில் இல்லை. கற்றறிந்த புலவர்களெல்லாம், ஏன்? ஞானிகளும், பற்பல தொழில்களைச் செய்து வந்தார்கள். பண்டைத் தமிழ்ப் புலவர்களில் ஒருவர் வைத்தியர்—மருத்துவன் தாமோதரனார்; ஒருவர் தானியக்கடைக்காரர், கூலவாணிகன் சாத்தனார்; (கூலம்—தானியம்) ஒருவர் நெசவுத் தொழிலாளர்—திருவள்ளுவர்; ஒருவர் உபாத்தியாயர்—கணக்காயனார் நக்கீரனார்; (கணக்கு என்பது நூல்.) இங்ஙனம் அவர்கள் வெவ்வேறு பல தொழில்களைச் செய்து வந்திருக்கின்றனர். விரித்தால் மிக விரியும். திருமூலர் போன்ற ஞானிகள் பலரும் பற்பல தொழில்களைச் செய்திருக்கின்றனர். ஏசு கிறிஸ்துநாதர் தச்சுவேலை செய்திருந்தது நீங்கள் அறிந்ததுதானே. அந்தக் காலத்தில் ஏசுநாதர் பிறந்து வளர்ந்த 'பலஸ்தீன' என்னும் நாட்டில் இருந்த ஞானிகளும் பேர்பெற்ற குருக்கள்மார்களும், கல்லாசாரிகளாகவும், சிற்பாசாரிகளாகவும், தையற்காரர்களாகவும், சக்கிலியராகவும், கொல்லராகவும், குயவராகவும் இன்னும் பல தொழிலாளராகவுமிருந்து பற்பல தொழில்களைச் செய்து வந்திருக்கின்றார்கள். 'தன் மகனுக்குக் கைத்தொழில் கற்றுக்கொடுக்காமல் வளர்க்கும் தந்தை, தன் மகனைக் கள்ளனாக வளர்க்கிறான்' என்பது அந்நாட்டிலே வழங்கிய ஒரு பழமொழி. மகமதிய மதத்தின் தலைமணியாக விளங்கிய **நபிகள் நாயகரேன்பார்** இளமையில் ஆடுகளை மேய்த்தவர்; பின் பலவகையான தொழில்கள் செய்து பாடுபட்டவர். அதன் பின் ஒரு பணக்கார விதவையான கத்தீஜாரவி என்பாரிடம் ஒட்டகம் ஓட்டும் தொழிலில் அமர்ந்து, பின் அவரை மணந்து பணக்காரர் ஆனவர்.

இவை நிற்க. இத்தகைய பெரிய ஞானிகளில் ஒருவராகிய நம் திருமூலனார், தாம் மாடு மேய்க்கும் தொழில் செய்துகொண்டே மரநிழலில் அமர்ந்து இயற்றிய அருமையினும் அருமையான ஒரு நூல் உண்டு. அது திருமந்திரம் எனப்படும். அது மூவாயிரம் செய்யுட்களையுடையது. அதில் ஒரு பாடலைப் பாருங்கள். அது மேற்கூறிய 'நாயைக்கண்டால்..........என்னும் பழமொழியினை நன்கு விளக்குவதாகும்.

ஒருவன் ஒரு ஊருக்குப் போகின்றவன், ஒரு பெரிய காட்டின் வழியே செல்லவேண்டியவனானான். அப்போது அவன் நடுக்காட்டில் ஒரு பெரிய யானையைக் கண்டு திடுக்கிட்டான்; திரும்பி ஓடிவிட நினைத்தான். என்றாலும் ஒருமரத்தின் மறைவில் பதுங்கிக் கொண்டு அந்த யானையை எட்டி எட்டிப் பார்த்தான். அது இருந்தவிடத்திலிருந்து நகரவுமில்லை, அசையவுமில்லை. அவனுக்கும், இராமநாதபுரத்தில் எனக்கு வந்த ஐயம் வந்துவிட்டது. ஒகோ! இது உண்மை யானையைப் போலச் செய்து வைத்திருக்கும் செயற்கை யானைபோலும் என்று எண்ணினான். மரங்களின் மறைவிலே கொஞ்சம் கொஞ்சமாகச் சென்று முடிவில் அந்த யானையின் அருகிலும் போய்விட்டான். ஓ! அந்த யானை அவன் நினைத்தபடியே கருங்காலி முதலாய கரிய மரங்களால், மிக அழகாக, உண்மை யானையே என்று நினைக்கும்படியாக, அவ்வளவு வேலைப்பாட்டுடன் செய்யப்பட்டிருக்கக் கண்டு வியந்தான். அவன் முதலில் யானை யென்று நினைத்தபோது, அவனுக்கு மரம் என்ற உணர்ச்சி வரவில்லை. பின் அவன் அதை மரம் என்று கண்ட போது, அவனுக்கு யானையென்ற உணர்ச்சி வரவில்லை என்ற கருத்தில் நமது திருமூலர்,

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை—என்று கூறியுள்ளார்.

இந்த அழகிய அடிகளின் சொல்லெளிமையினையும் இனிய ஓசையினையும் பொருள் ஆழத்தினையும் காண்பீர்களாக! இது உபமானம்.* இதன் உபமேயமாக அவர் கூறியிருப்பதையும் கூறுகிறேன் கேளுங்கள்.

---

* உபமானம் உபமேயங்களைத் தமிழ் நூலோர் முறையே, 'அடை' என்றும் பொருள் என்றுங் கூறுவர்.

ஒருவன், ஒருகோயிலுக்குச் சென்ருன். அங்குள்ள ஒரு தெய்வத்தின் சிலையினைக் கண்டான். அதன்மேல் ஒரு பணக் காரக் கோமுட்டிச் செட்டியார் தங்கக் கவசம் (போர்வை) செய்து போட்டிருக்கிருர்; ஒரு நாட்டுக்கோட்டைப் பெருஞ் செல்வர் அந்தக் கவசத்தின்மேல் சிகப்பு வைரம் பச்சை முதலாய மணிகள் வைத்திழைத்த அணிகலன்கள் பலசெய்து போட்டிருக்கிருர். அன்றை அலங்காரம் (அணி) திருவானைக் காவிலிருந்து வந்திருக்கும் பேர்பெற்ற கணபதிக்குருக்கள் கைவேலை. இவைகளையெல்லாம் கோயிலுக்குச் சென்றவன் கண்டான். அலங்கார அழகுகளை உற்று உற்றுப்பார்த்தான். என்ன அலங்காரம்! என்ன அலங்காரம்! என்ருன். உள்ளம் நிறைந்தான், உடல்பெருத்தான். அவ்வளவில் அத்தெய்வத் தினைக் கும்பிட்டு மீண்டான். மீளுகின்றவன் வழியில் வருகின்ற வர் போகின்றவர்கட்கெல்லாம் அந்த அலங்காரத்தை எடுத்துக் கூறிக்கூறி அவரவர்களைப் போய்ப் பார்த்துவர வேண்டினன். இது நிற்க, இன்னெருவன் அதே கோயிலுக்குச் சென்ருன். தெய்வத் திருமுன்பு செல்லுமுன் அங்கு இறைவன் உண்மை யில் இருப்பதாகவே எண்ணுகின்ருன், அஞ்சுகின்ருன். மேல் ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கும்பிட்டுக்கொண்டே போகின்ருன், காண்கின்ருன். எல்லாம் வல்ல ஆண்டவன், மேலான தூயஉலகத்திலிருந்து இந்தப் பாவ உலகத்திற்கு அடி யார்களை அளிப்பதற்காகவே இறங்கி வந்திருக்கும் பேரருளை நினைக்கின்ருன்; அடியார் பலர்க்குக் கண்கண்ட காட்சிகளைத் தந் தருளிய உண்மைவரலாறுகளை எண்ணுகின்ருன், உருகுகின்ருன்; பெரியோர் அருளிச் செய்திருக்கும் திருவருட் பாடல்களை உள்ளம் குழைந்துஓதுகின்ருன். செல்லையாவைப்போல-இல்லை-நமது அழுமூஞ்சிச் செல்லையாவைப்போல அழுகின்ருன், விழு கின்ருன்; எழுகின்ருன், தொழுகின்ருன்; தன்னிலை மறக்கின் ருன், அருள்வழிப் படுகின்ருன்; அவ்வாண்டவன்முன் தான் செய்த பாவச் செயல்களையெல்லாம் எண்ணி எண்ணி வருந்திப் பொறுத்திடல் வேண்டிக்கொள்ளுகின்ருன். ஆண்டவனிடம் விடைபெற்றுக்கொண்டு கனிந்த மனத்தோடும், கரை கடந்த கடவுட்பற்ருேடும் வீட்டுக்குச் செல்லுகின்ருன். இவ்விருவர்கள்

செய்கைகளையும் நோக்கி வேறுபாடு தெரிந்துகொள்ளுங்கள். முதலிற் சென்றவன் கோயிலில் கடவுள் நேரேயிருப்பதாக உணரும் ஆற்றலின்றிச் சிலையினையும் சிலையின் ஆடை அணிகள் அலங்காரங்களையும் கண்டு வியந்து மீண்டான். கடவுள் உணர்ச்சி அவனுக்கு வரவில்லை. அவனுக்கு, மெய்ப்பொருள் அங்கு இருப்பதாக உணரவல்ல ஒரு உணர்ச்சியை, சிலை ஆடை அணிகளாகிய உலகப்பொருள்கள் மறைத்தன. பின்னே சென்றவனோ ஆண்டவனே அங்கு இருப்பதாக நினைத்தான். இவனுக்குத் தங்கக்கவசம் விலையுயர்ந்த அணிகலங்கள் வேலைப்பாடுகள் புலனாகவில்லை. இவனுக்கு எய்திய பரம்பொருளின் உணர்ச்சி, உலகப் பொருளின் உணர்ச்சியை மறைத்தது. இப்போது அந்தத் திருமூலர் செய்யுளைப் பாருங்கள்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம் என்ற

அழகிய செய்யுளைப் பாருங்கள். இந்த உண்மைகளை ஒவ்வொரு மதத்தினரிடத்தும் காணலாம். ஒரு கிறிஸ்தவ மாணவச் சிறுவன் பள்ளியிற் பயிலும்போது தனது மதவேதமாகிய பைபிளை உண்மையான ஆர்வத்தோடு படித்திலன். அவற்றின் கருத்துக்களையும் அரிய நீதிகளையும் உணர்ந்திலன். ஆயினும் அவன் ஞாயிறு தோறும் கோயிலுக்குச் செல்லுகிறான். அங்கு அவன் கருத்திற்பட்டன என்ன? கோயிலுக்கு வருவார் போவார் யார் யார்? அவரவர் படிப்பு, செல்வங்கள் என்ன? எத்தனை பேர் வந்து போகின்றனர்? எப்போது வந்தனர்? எப்போது போயினர் முதலாய மக்களைப்பற்றிய செய்திகளும், ஆண்டவன் மேடையில் எத்தனை மெழுகுவத்திகள் எரிந்தன? சிலுவையில் இன்று என்ன அலங்காரம் செய்யப்பட்டிருந்தது? பாதிரிமார் எந்த விடத்தில் நின்று எவ்வாறு செபம் செய்தார்? மக்கள் எப்படி அதைக் கேட்டனர் என்றாற்போன்ற வழிபாட்டுப் பொருள்களையுமே அறிந்துகொண்டு திரும்பிவிடுகிறான். ஆனால் நமது செல்லையாவைப்போன்ற அரிய மாணவர்களோ தமது

மதநூல்களை-பைபிளை-நன்குபடித்து, ஆசிரியர்களிடம் நன்கு கேட்டுணர்ந்து, ஒரு உண்மையான கடவுட்பற்றினை அடைந்து அந்த ஆண்டவன் திருமுன் செல்லுகின்றனர். இவர்கள் கருத்து ஆண்டவனிடத்தே மட்டும் இருந்தமையின், வந்தார் போனார் யார்யார் என்பதும் தெரிந்திலர். ஆண்டவன் சிலுவை யைப் பார்க்கும்போது, ஏசுநாதர் நேற்றுத்தான் சிலுவையில் அறையப்பட்டிருப்பது போலவும் உயிரோடிருப்பதுபோலவும் அது காணப்படுகிறது; கண்டு கண்ணீர் வடிக்கின்றார்கள். அவ் வேசுநாதருடைய அகன்று விரிந்த கைகள், உலகத்தாரை யெல்லாம் அன்போடு வாரி அணைத்துக்கொண்டு போக விரிக் கப்பட்டனபோலத் தோன்றுகின்றன. என் இனிய மாணவர் களே! உலகத்தார்க்கு இரண்டு கண்கள் என்ற சொல்லத்தக்க இரண்டு சிறந்த கற்பனைகள் பைபிளில் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று, ஒருவன் இம்மை இன்பங்களை அடைவதற் குரியது, மற்றொன்று வீடுபேற்றின் இன்பத்தை அடைவதற் குரியது. இம்மையின்பத்திற்குரியதெனச் சொன்ன கற்பனை இரண்டாவது. அது, உன்னிடத்தில் நீ அன்பு கூர்வதுபோல, யாவரிடத்தும் அன்பு கூர்வாயாக என்பது. இங்ஙனம் உலகத் தார் யாவரிடத்தும் அன்பு பாராட்டுவார், உலகில் அடையும் இன்பங்களுக்கு எல்லையுண்டா? அவர்கட்குத் துன்பமென்பது எவ்வாற்றானும் எப்போதேனும் வருமா? இந்த இனிய கற்பனை யைச் சொல்லியருளிய அவர், அதன்படி நடந்து காட்டிய அவர், உலகத்தாரையெல்லாம் அன்போடு அணைப்பதற்கு அக் கைகளை நீட்டியிருப்பதுபோல அவர்கள் நினைக்கிறார்கள். அந்தக் கற்பனையில் மற்றொன்றாகிய முதலாவது கற்பனையைக் கேளுங்கள். 'கடவுள் ஒருவரே! அவரை உன் முழு இருதயத் தோடும் முழு ஆத்துமாவோடும் முழு மனத்தோடும் அன்பு கூர்வாயாக' என்பதாகும். இதனைவிட வீடுபேற்றிற்குரிய சிறந்த கற்பனை ஒன்று உண்டா? இதனைக் கூறிய அந்த ஏசு நாதர், அவ்வாறே நடந்தருளிய அந்த ஏசுநாதர், அச்சிலுவை யில் நின்று, தாம் மேற்கூறியவாறு அணைத்தெடுத்த உலக மக்களோடு, தமது பிதாவை நோக்கிச் செல்வதுபோல அம் மாணவர்கள் நினைக்கின்றார்கள், காண்கிறார்கள். முதலிற்சொன்ன

மாணவனுக்கும் பின்னர்க் கூறிய நன் மாணவர்கட்கும் உள்ள வேற்றுமைகளை நோக்குங்கள். முதலிற்சொன்னவனை உலகப் பொருள்கள் ஆண்டவனை நினைக்கவொட்டாது அறியவொட்டாது தடுத்திருக்கின்றன. பின்னர்கூறிய நன் மாணவர்களிடத்தோ, ஆண்டவன் உணர்ச்சி தோன்றி, உலகப்பொருள் உணர்ச்சியைத் தடுத்திட்டது. இந்த உதாரணத்தைக்கொண்டும் மேற்கூறிய திருமூலர் பாட்டின் கருத்தினை அறிவீர்கள். என்னரிய மாணவர்களே! இதுகாறும் கூறியவற்றால், செல்லையாவை விழிக்கச்செய்த நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம் என்ற பழமொழியின் கருத்தினை நீங்கள் உள்ளவாறு உணர்ந்துகொண்டீர்கள் என்று நம்புகிறேன்.

இப்படியே இன்னும் எத்தனையோ பழமொழிகள் உண்மைப்பொருள் விளக்கமின்றியே தவறான கருத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. மற்றொரு சமயத்தே 'பண்டைப் பழமொழிகளின் விளக்கம்' என்ற தலைப்பில் அவைகளைக் கூறுவேன். அன்றி நமது பள்ளிக்கூடப் பத்திரிகையில் எழுதுவேன் என்று முடித்தேன். பின், செல்லையாவால் பேசப்பட்ட இரக்கத்தைப்பற்றிப் பெரியோர் மொழிகளையும் செய்கைகளையும் சிறிது காட்டலாமென நினைத்தேன். அதன்படி, மாணவர்களே, பொதுவாகக் கூறுமிடத்து எல்லா அறங்களினும் வாயில்லா உயிர்களைக் கொடுமைக் குள்ளாக்காதது மேலான அறமே. இந்த அறத்தை வற்புறுத்தாத மதம் இல்லை. ஒரு மனிதன் இரஸூல்லாவிடம் (நபிகள்நாயகம்) ஒரு கம்பளத்தில் ஏதோ ஒரு மூட்டை கட்டிக்கொண்டு வந்தான். அவர் அது என்ன மூட்டை என்று கேட்டார். ஐயனே! நான் ஒரு காட்டின் வழியே வந்துகொண்டிருக்கும்போது பறவைக்குஞ்சுகளின் கூச்சலைக்கேட்டேன். உடனே நான் அவற்றைப்பிடித்து இந்தக் கம்பளிக்குள் வைத்துக்கொண்டேன். கொஞ்சம்தூரம் வந்தபிறகு அவற்றின் இரைச்சலைக் கேட்டுவந்த தாய்ப்பறவை என்னைச் சுற்றிச்சுற்றி சிறகை யடித்துக்கொண்டு பறந்தது. உடனே என் கம்பளத்தைத் திறந்து வைத்தேன். அப்பொழுது அந்தத் தாய்ப் பறவையும் குஞ்சுகளுடன் இணைந்து

கொண்டது. பிறகு அவையெல்லாவற்றையும் நான் என் கம்பளியில் சுருட்டி இதோ கொண்டு வந்திருக்கிறேன் என்றான். இதைக் கேட்ட நபிகள் நாயகம், அந்தோ! என இரங்கி அம் மூட்டையைப் பிரித்துக் கீழேவைக்கச் செய்தார். சூதுவாதற்ற தாயும் குஞ்சுகளும் அச்சம் தவிர்ந்து கலந்து உறவாடியிருந்தன. அதைக் கண்ட இரசுல் நாயகர், அன்பரே! 'இந்தத் தாய்ப் பறவை தன்னுடைய குஞ்சுகளினிடம் காட்டும் அன்பைக் கண்டு நீர் ஆச்சரியப்படுகிறீரன்றோ! இந்தத் தாய்ப்பறவை தன் குஞ்சுகளிடத்தில் காட்டும் அபிமானத்தைக் காட்டிலும் அதிகமான அபிமானத்தையே ஆண்டவன் நிச்சயமாகவே தன்னுடைய படைப்புப் பொருள்கள் ஒவ்வொன்றினிடத்திலும் காண்பிக்கின்றான். இதனை நான் என்னை அனுப்பிய ஆண்டவன் மீது ஆணையாகச் சொல்லுகிறேன். நீர் எங்கிருந்து இக்குஞ்சுகளைக் கொண்டுவந்தீரோ, அங்கே கொண்டுபோய் விட்டுவிடுவீராக. அங்கே தாயும் குஞ்சுகளும் கலந்து சுகமே வாழட்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

பாருங்கள் மாணவர்களே, இஸ்லாம் மதத்தலைவராகிய நபிகள் நாயகத்திற்கு உயிர்களிடத்திலிருந்த அருளை, இரக்கத்தை. இன்னும் கேளுங்கள். 'வாய்பேசாத பிராணிகளின் நிமித்தம் நீங்கள் ஆண்டவனுக்குப் பயந்து நடந்திடுங்கள்' என்பதும், 'ஆண்டவனுடைய படைப்புப்பொருள்கள் எல்லாம் அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவை' என்பதும், 'ஆண்டவனுடைய படைப்புப் பொருள்களிடத்திலும் தன்னுடைய சொந்தக் குழந்தைகளிடத்திலும் பட்சம் பாராட்டாதவனிடத்தில் ஆண்டவனும் பட்சம் பாராட்டமாட்டான்' என்பதும் அந்த நபிகள் நாயகத்தின் அருண்மொழிகளாகும். தாகத்தால் வருந்திய ஒருநாய்க்குத் தன் 'பாதரட்சையில்' துணியைக் கட்டிக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துத் தந்த ஒரு பெண்மணி, அப்புண்ணியம்பற்றி ஒரு பெருங்குற்றத்திலிருந்து மன்னிக்கப்பட்டிருக்கின்றாள். ஒரு பூனையைக் கட்டிவைத்து உணவின்றிச் சாகவிட்ட ஒரு பெண், அப்பாவம்பற்றி, மிக்க தண்டனை அடைந்துளாள். இங்ஙனமெலாம் இஸ்லாம் மதம்

கற்பிக்கும் உயிரிரக்கம் (சீவகாருண்யம்) பற்றிய செயல்களை விரிப்பின் பெருகும். இனிக் கிறிஸ்துவ மதத் தலைவராகிய ஏசுநாதர்தம் வரலாறுகளையும் அவர் உயிர்களிடத்தில் காட்டிய இரக்கங்களையும்பற்றிப் பைபிளைப் படித்துவரும் உங்களுக்கு நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. ஆண்டவன் படைத்த அருமை உயிர்ப்பொருள்களை, அவன் திருமுன்னே அழிக்கும் அட்டூழியத்தை ஒழித்தவர் அவரேயன்றோ! அவர் புறப்பட்டு வருகிறார் எனின், கோயிலில் பலியிட உயிர்ப்பொருள்களை வைத்திருப்பவர்கள் ஓடும் ஓட்டம் நீங்கள் அறிந்தது தானே! ஒரு சமயம் ஒரு பணக்காரனான ஒரு இளைஞன் ஏசுநாதரைப்பார்த்து, நான் கீழ்ப்படியவேண்டிய சிறந்த சில கற்பனைகளைக் கூறுக என வேண்டிக்கொள்ள, அவர் ஒரு ஐந்து கற்பனைகளை மட்டும் கூறினர். அவற்றில் முதலாவது "கொலைசெய்யா திருப்பாயாக" என்ற கற்பனையாகும். திரு. பிரான்சிஸ் என்பார், பறவைகளிடத்தும் விலங்களிடத்தும் காட்டிய பேரன்பும், அவைகள் அவ்வரைக்கண்டு மகிழ்ந்து, அவர் கூறுமாறு புரிந்து, உலகினை வியக்கச்செய்ததும் நீங்கள் படித்து அறிந்திருந்திருப்பீர்கள். 'கிறிஸ்துவன் என்பதற்கு அருள், பெருந்தன்மைகள் உடையவன் என்றும், கிறிஸ்துவன் அல்லன் என்பதற்கு அருள் பெருந்தன்மைகள் இல்லோன் என்றும், ஆங்கில வழக்கில் கூறப்படுகின்றன. இங்ஙனமெல்லாம் இம்மதத்தின்பாற் காணப்படும் இரக்கம் பற்றிய நீதிகளை விரிப்பின் மிகவிரியும். இனி உயிரிரக்கமே அடிப்படையாகக் கொண்ட சைவ, வைணவக் கொள்கைகளையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு எளிய புருவிற்காகச் சிபி என்ற ஒரு அரசன் தன் அருமை உடலை அறுத்தறுத்துக் கொடுத்தான் அன்றோ! ஒரு பசுவின் கன்றின் உயிரும் தன் அரிய மைந்தன் உயிரும் ஒன்றே யென்று மனுநீதிகண்ட சோழன் எண்ணினனன்றோ! தாயினை இழந்து தவித்த பன்றிக்குட்டிகளுக்குத் தாயாகிப் பாலூட்டிய தனி வள்ளல் பரமசிவனேயன்றோ! எளிய பறவை விலங்கு முதலியவற்றிற்கு ஆண்டவன் அருள் செய்திருக்கும் வரலாறுகளைக் கூறுத புராணங்களே இதிகாசங்களே இல்லையெனின் வேறு கூறுவானேன்!

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே—என்பதும்
தம்முயிர்போல் எவ்வுயிரும் தானென்று, தண்ணருள்கூர்
செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பாரபரமே

என்பதும், இந்துமதங்களின் உயிர்நிலையான கொள்கைகளாகும். இனி உயிர்களிடத்தே அன்புவைத்தலே தமது மதமாகக் கொண்டுள்ள புத்தமதம் அருக மதங்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? இங்ஙனம் எல்லாமதங்களாலும் போற்றப்படும் அருள் அல்லது இரக்கம் என்னும் மிக உயர்ந்த பொருளைப் பற்றிப் பேசிய செல்லையாவின் விரிவுரை மிகமிகப் பாராட்டத் தக்கதே என முடித்தேன்.

அப்போது ஒரு மாணவன் இபுராகிம் என்னும் பெயரினன் எழுந்து, செல்லையா பேச்சுமட்டிலன்றிச் செய்கையிலும் காட்டும் தீரன் என்றும், ஒருசமயம் ஒரு இடையூற்றில் அகப்பட்டுக் கொண்டானென்றும் கூறினன். மெய்தான் மெய்தான் நான் நினைத்தது மெய்தான். பஞ்சதந்திரக்கதைதான். முதலில் அழுமூஞ்சிச் செல்லையா என்ற பேர், பின்பு நாயைக் கண்டால் என்ற பழமொழி, இப்போது ஏதோ ஓர் இடையூறு. எங்கே அதையும் பார்ப்போம். என்ன இடையூறு, அதை விரிவாகச் சொல் என்றேன். அம்மாணவன் கூறுகிறான்-'அதா ஐயா, சில பசங்கள் ஒரு கழுதையைப்பிடித்து அதன் வாலில் பன மட்டைகளைக்கட்டி நெருப்புவைத்து விட்டார்கள். செல்லையா, அது மிகுந்த அச்சத்தோடும் வருத்தத்தோடும் ஓடிவந்ததைக் கண்டான். உடனே ஓடி மண்ணை அள்ளிப்போட்டு நெருப்பை அணைத்து விட்டான். பின் அம்மட்டைகளையும் அறுத்துவிட முயன்றபோது, பாவம் அக்கழுதை அவன் கையில் நன்றாக உதைத்துவிட்டது. கையில் மிக வலுவாக உதைபட்டதால் கைமிகவும் வீங்கியிருந்தது. அவன் கையைப் பாருங்கள்! யாரோ ஒரு வைத்தியர், வீக்கத்திற்கு ஏதோ மருந்து கட்டினாராம். அது வெந்து புண்ணாகிவிட்டது ஐயா! என்றனன். கேட்டபோது எனக்கு மிக்க வருத்தமாகவிருந்தது. எங்கே செல்லையா இங்கேவா பார்ப்போம் என வரவழைத்துப் பார்த்த

போது, நல்ல வேளையாக அவன் இப்போது நல்ல வைத்தியரிடத்தில் மருந்துபோட்டு வருவதால் காயம் செம்புண்ணிட்டு ஆறிவருவதுகண்டு ஆறுதலுற்றேன். 'பீரியட்' (பாடநேரம்) முடிவதற்கு இன்னும் சற்று நேரமிருந்ததால், பிறர் அல்லது பிறவற்றின் இடையூற்றை விலக்குவதிலும் வைத்தியம் செய்து கொள்வதிலும் சில முன்னுணர்ச்சி (எச்சரிக்கை)களைச் சுருக்கம் சுருக்கமாகக் கூறினேன்.

முதலாவதுபற்றி, மாணவர்களே! நாம் பிறர் அல்லது பிறவற்றின் இடையூற்றில் உதவிசெய்வது இன்றியமையாததே யாகும். ஆனால் அந்த இடையூற்றின் தன்மையையும் நமது ஆற்றலையும் நோக்கிக்கொள்ளல்வேண்டும். ஒருவன் ஒரு குளத்தில் நீந்திச்செல்கிறவன் நடுக்குளத்தில் கை தளர்ந்து மூழ்கிக் கொண்டிருக்கிறான். அவ்வளவு தூரம் நீந்திச்சென்று அவனைக் கொண்டுவரும் ஆற்றல் இல்லாதவனும், தனக்குரிய ஆற்றல் போதுமோ போதாதோ என்று ஐயுறக்கூடிய நிலையில் உள்ளவனும் அந்த வேலையில் தலையிடலாகாதல்லவா? அவர்கள் செய்யவேண்டியதென்ன? உடனே ஓடி அக்கம் பக்கத்திலிருப்பவர்களைக் கூவியழைப்பதும், அவனைத் தப்புவிக்க வேண்டிய வேறு எந்த முயற்சியும் செய்வதுமே யாகுமன்றோ! அன்றித் தன் ஆற்றலறியாது அவ்வேலையிலிறங்கினால், முழுகுகிறவனும் உதவி செய்ய முன் வந்தவனும் சேர ஆழ்ந்து இறந்துவிடநேரிடுமன்றோ! இவ்வாறு இறந்தவர்கள் மிகப்பலர். திருவள்ளுவர்,

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தி னூக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்—என அருமையாகக் கூறி வைத்திருக்கின்றார். செய்யக்கூடிய உதவிகளையெல்லாம் செய்வதும், செய்ய இயலாத காரியங்களை இறைவனிடம் ஒப்படைத்து இயன்ற முயற்சிகளைச் செய்வதுமே ஒருவர் கடமையாகும். நீரில் முழுகுகின்றவர்களைக் காப்பாற்றுவோர் அறிய வேண்டும் பொருள் மிகப்பல. இங்ஙனமே மக்களுக்குத் திடுமென வரத்தக்க வேறுபல இடையூறுகளும் அவற்றைக் குறித்து அருகிலுள்ளோர் செய்யத்தகும் முதலுதவிகளும்

மிகப்பல. நீங்களெல்லோரும் சாரணர்களாகவோ (Scouts) குருளைகளாகவோ (Cubs) ஆனல், அவைகளை யெல்லாம் உங்கட்கு நமது பள்ளிக்கூடத்துச் சாரண ஆசிரியர்கள் நன்கு சொல்லித்தருவார்கள். அப்போது உங்கட்கு நீந்துவதெப்படி, நெடுந்தொலை நீந்துவதெப்படி, நீரில் முழுகுவோர் நிலை அறிவதெப்படி, எவ்வாறு அவர்கட்கு உதவிசெய்யவேண்டும், தமக்கே தீங்கு வந்தால் எவ்வாறு தப்பிக்கொள்ளவேண்டும் என்பனவெல்லாம் கூறிக்காட்டுவர், செய்துங்காட்டுவர். இதுமட்டுமோ மயக்கம், எலும்புமுறிவு, படுகாயங்கள் முதலாய இடையூறு பலவற்றுக்கும் முதலுதவிகள் பலவும் கூறி, செய்துங்காட்டுவர். சாரணர் ஆகவோ குருளைகள் ஆகவோ சேருவதின் நன்மைகளையெல்லாம் கூற எனக்கு இப்போது நேரமில்லை. இரண்டொரு சொற்றொடர்களிற் கூறுகிறேன். அவ்வாறு சேர்தல், உடற்பயிற்சிகள் தந்து, உடல்நலம் பெருக்கும்; அதனோடு சுறுசுறுப்பு, ஊக்கம், முயற்சி, உண்மைபேசல், ஒற்றுமை முதலாய பல நற்குணங்களையும் பற்பல நல்லொழுக்கங்களையும் உண்டாக்கும்; அச்சம், சிடுமூஞ்சித்தனங்களையெல்லாம் ஒழிக்கும். அஃதிருக்கட்டும். செல்லையா கழுதைக்கு உதவி செய்யச் சென்றது மெச்சத்தக்க தென்பதிற்றடையில்லை. ஆனல் சற்றுக் கருத்தோடு நடந்துகொண்டிருக்க வேண்டும். நீங்களெல்லாம் சிறுபிள்ளைகள் தாமே. போகப் போகத்தான் பலவற்றை அறிந்துகொள்வீர்கள். இன்னும் சிறிதுநேரம் இருப்பதால், நான் மேலே சொல்லியிருக்கிறபடி, வைத்தியம் செய்து கொள்வதுபற்றி ஒரு சிறு குறிப்புமட்டும் சொல்லி நிறுத்திவிடுகிறேன். நம் நாட்டில் பலர் வைத்தியம் என்பது என்னவென்றே தெரிந்து கொள்ளாதவர்களாக விருக்கிறார்கள். வைத்தியம் என்ற சொல்லையே அறிந்து கொள்ளாதவர்கள்கூட வைத்தியம் செய்ய அஞ்சாது முன் வருகிறார்கள்! நோய் வந்தவர்களெல்லாம், அதற்கு ஒரு மருந்துண்டவர்களெல்லாம் வைத்தியர்களாகி விடுகிறார்கள். ஒருவன் தனக்குத் தலைவலியுண்டாயபோது போட்டமருந்தை, மற்றொருவனுக்குத் தலைவலியுண்டாகக் கண்டால், அஞ்சாது போட்டு விடுகிறான். பாருங்கள்! தலைவலி எத்தனையோ பல காரணங்களால் வருமே!

வெப்பத்தால் வரும், குளிரால் வரும், பசியால்வரும், செரிக்காமையால் வரும், இரத்தக் குறைவால் வரும், இரத்த மிகுதியால் வரும், களைப்பால் வரும், விழிப்பால் வரும், துயரால் வரும், அயர்வால் வரும்—இங்ஙனமெல்லாம் இன்னும் எத்தனையோ காரணங்களால் வருமே! எல்லாவற்றுக்கும் ஒரே மருந்துதானு? ஒன்று கேளுங்கள். வியாதி வந்தவர்கள் பணக்காரராயிருந்தால், சிறந்த வைத்தியர்களைத் தம் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுவந்து அவர்களிடம் வைத்தியம் செய்து கொள்ளல் வேண்டும். ஏழைகளாக விருந்தால் அறவைத்திய சாலைகளுக்குச்சென்று அங்குள்ள சிறந்த வைத்தியர்களிடம் முறையாக வைத்தியம் செய்துகொள்ளல் வேண்டும். இங்ஙனமின்றிக் கண்டவர்களிடமெல்லாம் வியாதியைக்கூறி, அவரவர்கள் கூறும் மருந்துகளையெல்லாம் உட்கொண்டால் நம் செல்லையாவைப்போல் அல்லற்பட வேண்டியதுதான். பண்டைக் காலத்தில் நம் தேசத்தில் சிறந்த வைத்தியர் இருந்தனர். அவர்கள் நோய்நாடி, நோய் முதல்நாடி, அது தணிக்கும் வாய்நாடி, வாய்ப்பச்செயல்-என்றதிருவள்ளுவர் மொழியினைக்கடைப்பிடித்து வியாதி இன்னதென்றும், அது எக்காரணத்தால் வந்துளதென்றும், அதனைப் போக்கும் வழி யாது என்றும் அறிந்து, ஒவ்வொருவரது உடற்கூறுகளையும் கண்டு, அவ்வவர்க்கேற்றவாறு மருத்துவம் செய்து வந்தனர். அத்தகைய மருத்துவ முறையைத் தலைமுறையாக விடாது நடாத்தி வருவோர் இக்காலத்தும் பலர் உளர். என்றாலும், இக்காலத்தேபோல் நோய் வந்தவர்களெல்லாம் மருத்துவர்களாவது, நமது நாட்டில் பண்டைக்காலத்தே யில்லை. இக்காலத்து நிலையினை விளக்க, ஒரு சிறு உதாரணம் கூறுகிறேன். தென்னாட்டில் ஒரு சிற்றரசர் சில காலங்களுக்குமுன் இருந்தார். அவர் எல்லையில் அவர் வைத்ததுதான் சட்டம். அந்தச் சிற்றரசருக்கு ஒரு சமயம் தலைவலி வந்தது. நாழிகைக்கு நாழிகை, நொடிக்கு நொடி புதுப்புது மருத்துவர், புதுப்புது மருந்து. தலைவலியோ இந்த ஆரவாரங்களுக்கு அசையவில்லை. அறிவாளியாகிய ஒரு மருத்துவர் அப்போது அந்த ஊர்க்கு வந்திருந்தார். இந்தக் கூத்துக்களை

யெல்லாம் கண்டார்; தாம் அரசனுக்கு வைத்தியம் செய்வதாக முன் வந்தார். அரசனுக்கு இந்த வைத்தியத் தொல்லைகள் ஒழிந்து ஓய்வு கிடைத்தால்தான், தலைவலி குணமாகுமென்பதைக் கண்டு கொண்டார். அதன்மேல் ஒரு தந்திரம் எண்ணினார். இந்தத் தலைவலியைப் போக்கும் ஒரு பச்சிலை நடுக்காட்டில் இருப்பதாகவும், அதனைக் கண்டவுடனே சாறு பிழிந்து தடவினலன்றிச் சாறுவராதென்றும் ஆகவே அரசனும் தானும் அங்குப் போகவேண்டுமென்றும், மிக்க ஆரவாரங்களுடன் சென்றால் பச்சிலை கண்ணிற்படாதென்றும் கூறினர். விரிப்பானேன். அரசன் ஒரு பல்லக்கில் சிற்சில ஆட்களுடன் வர, அவ்வைத்தியர், அவ்வரசனை நல்ல காற்று வீசும் நாட்டுப்புறத்து வெட்ட வெளிகளிலெல்லாம் அழைத்துச் சென்று, பின்புலசிறந்த பச்சிலைகளின் மரங்களின் காற்று வீசும் காட்டினுள்ளும் அழைத்துச் சென்றார். இந்த இயற்கை மருத்துவத்தாலே அரசன் தலைநோய் குறையப் பெற்றான். ஏதோ ஒரு பச்சிலைச் சாறும் தடவப் பெற்றது. கல்லை என்பது ஒரு பச்சிலைச் செடியென்றும், அது மலையடிவாரங்களில் இருக்குமென்றும், அது தலைவலிக்குச் சிறந்த மருந்தென்றும், விளையாட்டுப் பாட்டாகத்தோன்றும் 'மலையடிவாரக் கல்லை................ போட்டால், தலைவலி நீங்கிப்போகும்' என்ற அரிய பாட்டால் அறியலாம். ஒரு சமயம் நமது வைத்தியர் அதே பச்சிலைச் சாற்றைப் போட்டாலும் போட்டிருக்கலாம். எப்படியோ, தலைவலி முற்றும் நீங்கிவிட்டது. அரசன் அரண்மனை யுற்றான். மருத்துவரிடம் என்னவேண்டுமோ அதைக் கேட்பீராக, தடையின்றித் தருகிறேன் என்று கூறினன். மருத்துவர் பதினாயிரம் இருபதினாயிரம் கேட்டிருக்கலாம். வரியில்லாமல் சில ஊர்கள் கேட்டிருக்கலாம். நமது மருத்துவர் எளியரல்லர், பேர் அறிவாளி. ஆகவே, உலகத்தார் மருத்துவத்தொழிலின் அருமையை அறியவேண்டும், அதனை எல்லோரும் செய்யப் புகுந்திருக்கும் வேடிக்கையை உலகிற்குக் காட்டவேண்டும் என்று எண்ணினார். அவ்வரசனிடம், ஐயனே! எனக்குத் தங்கள் அருளே பெருஞ் செல்வம்; வேறு செல்வம் வேண்டாம். என்னை உங்கள்

நாட்டிலிருக்கும் மருத்துவர்கள் எல்லோரும் அறித்துகொள்ளும் படி, வைத்தியஞ் சொல்வோர் ஒவ்வொருவரும் எனக்கு ஒரு காலணு வரி செலுத்திவரும்படி கட்டளையிட்டால், அது கொண்டு இந்த ஏழையேன் என்றும் மறவாத நன்றி செலுத்தித் தொண்டுசெய்திருப்பேன் என்றனர். அரசன் கேட்டு வியந்தான். அவ்வாறே கட்டளையிட்டான்; முதலிற் சில காலம், அரசன் கட்டளையை வைத்தியர்கட்கு அறிவித்துப் பழக்குவிக்க ஒரு சேவகன் உதவியினையும் தந்தனன்.

அவ்வளவில் நம் வைத்தியர் சேவகனுடன் வெளிப்பட்டார். பல மக்களும் இடையருது போக்குவரவு செய்துவரும் ஓரிடத்தே போய் உட்கார்ந்தார். அப்பா! ஐயோ! தலைவலிக்கிறதே! ஐயோ! பொறுக்க முடியவில்லையே! ஐயோ என்று அரவமிட்டுக் கொண்டிருந்தார். அவ்வளவு தான்! ஒரு பல்லுப் போன கிழவி வந்தாள், உருக்கமாகக் கேட்டாள், அப்பா! சுக்கை உரைத்துப்போடு என்ருள். வளர்ப்பானேன்! முன்ருனையில் எட்டு முடிப்பு முடிந்திருந்த ஒரு காலணு, சேவகனுக்குப் பயந்து வந்து விழுந்தது. சுக்கினுல் தலைவலி தீராவிட்டாலும், அவள் ' நீங்கள் நாசமற்றுப்போக' என்று வாழ்த்திச் சென்ற வாழ்த்தாலாவது, தலைவலி போகத்தான்வேண்டும். அப்பால் ஒரு சிறுவன் ஆப்பம் வாங்கச் சென்றவன், 'அமிர்தாஞ்சனம்' போடச் சொன்னவன்; அவன் ஆப்பக்காசு காலணு—'மரியாதை' 'அரண்மனை அதிகாரங்'களைத் தெரியாத காலணு—ஒரு அறையை வாங்கித் தந்துவிட்டு வந்து சேர்ந்தது. அப்பால் விறகு விற்று வந்தவன், அவன் வைத்திருந்த அரைப்பணத்தில் ஒரு காலணு, ஒரு பச்சிலை சொன்ன அபராதமாக வந்து சேர்ந்தது. அப்பால் ஒரு குடிகாரன், ஒரு திராக்ஷாசாராயம் என்ற மருந்தைச் சொல்லித் தான் வைத்திருந்த அரைப்பெட்டிக் கள்ளுக்காசில் காலணுவையிழந்தவன். அப்பால் ஒரு ஆங்கிலம்படித்த பையன், ஏதோ ஒரு 'ஆயில்'ன் (எண்ணெய்) பேரைச் சொல்லிய குற்றத்திற்காக ஒரு காலணு இழந்து, அறிவிலி (Non-Sense)என்று தன்னையோ பிறரையோ சொல்லிக்கொண்டு போனவன். ஏன் வெகுதூரம் போக

வேண்டும்? ஒரு 'முகூர்த்த' நேரத்தில், காலணு காலணு காலணுவாகவே ஒரு மூட்டை சேர்ந்துவிட்டது. நல்லது மாணவர்களே! நேரம் முடிந்துவிட்டது. இதோ மணியடிக்க இராமசாமி போவதைப் பாருங்கள் இதனால் மருத்துவத்தின் இக்கால நிலையினையும் வைத்தியஞ் செய்துகொள்வோர் கருத் தகாவிருக்க வேண்டுவதனையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். திருவருள் கூட்டுவிக்கும்போது மீண்டும் உயிரிரக்கம் முதலிய பலவற்றையும்தொடர்ந்து பேசுவேன் என்று எழுந்தேன். அப்போதும் விடாமல், இராமசாமி என்ற ஒரு மாணவன் எழுந்து, மனிதர்களைக் கொல்லும் அல்லது தொந்தரவு செய்யும் கொடிய மிருகங்களுக்குமா இரக்கம் காட்டவேண்டும் ஐயா! என்று கேட்டான். உடனே நான் இது கொஞ்சம் சிக்கலான கேள்வி. இதற்கு விரிவாக விடை கூறவேண்டுமே, நேரமில்லையே, என் செய்வேன் என்றேன். உடனே எல்லோரும் நேரமானால் ஆகிறது, கடைசிப் 'பீரியட்' தானே, உங்களுக்கு வசதியிருந்தால் நாங்கள் எவ்வளவு நேரமானாலும் இருப்போம் என்று கூச்சலிட்டார்கள். அதன்மேல், நல்லது மாணவர்களே! உங்களோடு அளவளாவுதலினும் மகிழ்ச்சியுண்டாக்கக் கூடிய வேறு வேலை எனக்கு இருக்குமா? யாரேனும் விரைவில் போகவேண்டியவர்கள் இருந்தால், தனியே கேட்டுக்கொண்டு போய்விடலாம் என்றேன். எழுவார் ஒருவரும் இல்லை. அதன் மேல் நான் என் இனிய மாணவர்களே! இப்போது இம் மாணவன் கேட்ட கேள்வி எளிதானதன்று. பாம்பு, புலி, சிங்கம் முதலானவை மக்களுக்குத் தீங்கிழைக்கும் உயிர்ப் பொருள்கள். அவைகளைக் கண்டால் கொல்வதா அன்றி இரக்கம் காட்டி விட்டுவிடுவதா என்பது கேள்வி.

தொடரும்.

வே.